தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கொடைக்கானல் வனப் பகுதிகளில் குப்பை அகற்றும் முகாம்

**கொடைக்கானல்** வனப் பகுதிகளில் குப்பைகளை அகற்றும் முகாமில் பள்ளி மாணவர்கள் மற்றும் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டனர்.

கொடைக்கானலில் கடந்த இரண்டு மாதங்களாக சீசன் நிலவி வந்த வேளையில் பல்வேறு இடங்களிலிருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் கொடைக்கானலுக்கு வந்துள்ளனர். அவர்கள் பயன்படுத்திய பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் தேவையில்லா பொருள்களை வனப்பகுதிகளில் விட்டுச் சென்றுள்ளனர். இதனால் வனப் பகுதி மாசுபடியாமல் இருக்க வனத்துறையினர் மற்றும் பள்ளி மாணவர்கள், தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் வனப்பகுதிகளில் குப்பைகள் அகற்றும் முகாமில் ஈடுபட்டனர்.

இம் முகாமை மாவட்ட வன அலுவலர் வெங்கடேசன் தொடங்கி வைத்து பேசியதாவது:கொடைக்கானல் வனப் பகுதியில் உள்ள சுற்றுலா இடங்களுக்கு பிளாஸ்டிக், பொருள்கள் மற்றும் மதுபானங்கள், புகை பிடித்தல் பொருள்கள் கொண்டு செல்வதற்கு கடந்த ஆண்டு அனுமதி மறுக்கப்பட்டது. அவை பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தாண்டு வனப் பகுதிக்கு செல்லும் சுற்றுலா வாகனங்களை சோதனையிட்டதில் கடந்தாண்டை விட குறைவான பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் மது பானங்கள், புகை பிடித்தல் பொருள்கள் இருந்தது வாகனச் சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. வருங்காலங்களில் இவைகள் படிப்படியாக குறைவதற்கு வாய்ப்புண்டு.

மேலும் வனப் பகுதிகளில் மாதத்துக்கு இரண்டு முறை குப்பைகள் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.

தற்போது சீசன் காலத்தில் அதிகமான குப்பைகள் இருந்து வருவதால் அவற்றை

அகற்றும் பணி நடைபெறுகிறது என்றராம். முன்னதாக துப்புரவுப் பணி முகாமிற்கு வந்தவர்களை வனவர் சந்துரு வரவேற்றார்.

இந் நிகழ்ச்சியில் ஆர்.சி.பள்ளி ஆசிரியை ஜூலி மற்றும் மாணவர்கள், தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராட்சை விவசாயத்தில் கூடுதல் மகசூல்: விவசாயிகள் மகிழ்ச்சி

**கம்பம்,** பள்ளத்தாக்கு பகுதியில் திராட்சை விவசாயத்தில் அதிக மகசூல் மற்றும் நல்ல விலையும் கிடைத்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ô ட்டில், திராட்சை விவசாயம் அதிகளவில் நடைபெறும் மராட்டிய மாநிலத்துக்கு அடுத்தபடியாக தமிழ்நாடு 2 ஆம் இடத்தில் உள்ளது.

திராட்சைக்கு ஏற்ற தட்ப வெப்ப நிலை, தேனி மாவட்டத்ல் ஓடைப்பட்டி, சின்னமனூர், காமாட்சிபுரம், கோகிலாபுரம். ராயப்பன்பட்டி, சுருளிப்பட்டி, கம்பம்,புதுப்பட்டி மற்றும் கூடலூர் பகுதியில் காணப்படுகிறது. இதன் காரணமாக சுமார் 6 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இப்பகுதியில் திராட்சை விவசாயம் நடைபெற்று வருகிறது.

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் மட்டும் தான் ஆண்டுக்கு 3 முறை திராட்சை மகசூல் எடுக்கப்படுகிறது. இதன் காரணமாக மாவட்டத்தின் முதன்மை விவசாயிகள் பலரும் திராட்சை விவசாயத்தை செய்து வருகின்றனர்.

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் தற்போது நிலவி வரும் தட்பவெப்ப நிலை திராட்சைக்கு ஏற்றதாக அமைந்த காரணத்தால், ஏக்கருக்கு 6 ஆயிரம் முதல் 7 ஆயிரம் கிலோ வரை விளைச்சல் ஏற்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் ஏக்கருக்கு ஆயிரம் கிலோ அதிக மகசூல் கிடைத்துள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த சில வாரங்களாக ஒரு கிலோ பன்னீர்(கருப்பு)திராட்சை ரூ.25 முதல் 30 வரை விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படுகிறது. கொள்முதல் செய்யப்பட்ட திராட்சை அதிகளவில் கேரளாவுக்கும், தமிழகத்தின் இதர மாவட்டங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

## <u>மீன்களுக்கு அதிக விலை: மீனவர்கள் மகிழ்ச்சி</u>

**ராமேசுவரம்**, கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களுக்கு அதிகமான இறால் மீன்கள் சிக்கியது. இறால் மீன்களை வியாபாரிகள் கூடுதல் விலைக்கு வாங்கிச் சென்றதால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

ராமேசுவரம் பகுதியிலிருந்து திங்கள்கிழமை காலையில் 700க்கும் மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். மீனவர்கள் விரித்த வலைகளில் அதிகமான இறால் மீன்கள் சிக்கின.

இதையடுத்து செவ்வாய்க்கிழமை காலையில் கரை திரும்பிய மீனவர்களிடம், வியாபாரிகள் போட்டி போட்டுக்கொண்டு இறால் மீன்களை கிலோ ரூ.500 முதல் 700 வரை விலைக்கு வாங்கிச் சென்றனர். இறால் மீன்களுக்கு கூடுதல் விலை கிடைத்ததால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

இதுகுறித்து மீனவர் ஒருவர் கூறும்போது, ஒவ்வொரு படகுக்கும் 140 கிலோ முதல் 190 கிலோ வரை இறால் மீன்கள் கிடைத்துள்ளன.

இறால்களுக்கு நல்ல விலையும் இருப்பதால், மீனவர்களுக்கு அதிக லாபம் கிடைத்துள்ளது என்றார்.

## <u>கடும் விலை வீழ்ச்சி: மல்லிகை கிலோ ரூ.40 ஆக சரிவு</u>

**சத்தியமங்கலத்தில்** மல்லிகை உற்பத்தி பன்மடங்காக பெருகியுள்ளதால் அதன் விலை கிலோ ரூ.40 ஆக சரிந்துவிட்டது. கடும் விலை வீழ்ச்சி காரணமாக பூ விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

சத்தியமங்கலத்தை அடுத்துள்ள சிக்கரசம்பாளையம், புதுகுய்யனூர், வடவள்ளி, பவானிசாகர், தாண்டாம்பாளையம், கெஞ்சனூர் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் 50 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மல்லிகை, முல்லை சாகுபடி செய்யப்படுகின்றன. இப்பகுதியில் தினமும் 15 டன் மல்லிகை வரத்து உள்ளது.

வியாபாரிகளிடையே போட்டி இல்லாத காரணத்தால் மல்லிகை விலை மளமளவென சரிந்து செவ்வாய்க்கிழமை கிலோ ரூ.40க்கு விற்கப்பட்டது.

கோடை காலத்தில் பூக்களின் உற்பத்தி அதிகமாகவே இருக்கும். கடந்த சில நாள்களாக இப்பகுதியில் மழை பெய்துள்ளதால் வறட்சியில் காய்ந்துபோன செடிகள் மீண்டும் தழைத்து மொட்டு விட்டதால் பூக்களின் உற்பத்தி அபரிமிதமாக உயர்ந்தது. இங்கு விளையும் பூக்கள் ஆந்திரம், கேரளம் மற்றும் கர்நாடகத்தின் மைசூரு, பெங்களூரு போன்ற நகரங்களுக்கு அனுப்பப்படும்.

தற்போது, சேலம், திம்மாபுரம், பனைமரத்துப்பட்டி ஆகிய இடங்களிலும் பூக்கள் வரத்து அதிகமானதால் அவை மைசூரு, பெங்களூரு போன்ற மார்க்கெட்டில் சத்தி பூக்களுக்கு போட்டியாக இருந்தன.

இதனால், சத்தி பூக்கள் கர்நாடகத்துக்கு அனுப்புவது நிறுத்தப்பட்டது.இதையடுத்து, உற்பத்தியான பூக்கள் நிலக்கோட்டை, மருதூர், வீரபாண்டி, மேட்டுப்பாளையம் ஆகிய இடத்தில் செயல்படும் சென்ட் தொழிற்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. தேவையை விட வரத்து அதிகமானதால் சென்ட் தொழிற்சாலைகளும் இந்த சந்தர்ப்பத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி மல்லிகையை கிலோ ரூ.90ல் இருந்து ரூ.40 ஆக குறைத்து கொள்முதல் செய்தன.

தோட்டத்தில் ஒரு கிலோ பூக்களை பறிக்க ரூ.45 வரை செலவாகிறது. ஆனால் உற்பத்தி விலை கூட கிடைக்காமல் தவிக்கின்றனர் பூ விவசாயிகள்.

சத்தியமங்கலம் பூ மார்க்கெட்டில் செவ்வாய்க்கிழமை விற்கப்பட்ட பூக்களின் விலை விவரம்: (விலை கிலோவில்) மல்லிகை ரூ.40, முல்லை ரூ.35, கனகாம்பரம் ரூ.120, செண்டுமல்லி ரூ.40, பட்டுப்பூ ரூ.60, சம்பங்கி ரூ.35.

இது குறித்து தமிழ்நாடு மலர்கள் உற்பத்தியாளர் தலைமைச் சங்கத்தின் தலைவர் எஸ்.ஆர்.முத்துச்சாமி, செயலாளர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் செவ்வாய்க்கிழமை கூறியது: பூக்களின் உற்பத்தி அதிகமானதால் அதன் விலையும் கிலோ ரூ.40 ஆக சரிந்துவிட்டது. (அதாவது ஒரு படி மல்லி ரூ.10க்கு விற்கப்பட்டது)

ஒரு கிலோ பூக்கள் உற்பத்தி செய்ய ரூ.45 வரை செலவாகிறது.

வெளிமார்க்கெட்டில் பூக்களுக்கு விலை கிடைக்காததால் இப்பகுதியில் விளையும் பூக்களை வாசனை திரவியம் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கிறோம். இதனால் சங்கத்திற்கு தினந்தோறும் ரூ.1 லட்சம் வரை நஷ்டம் ஏற்படுகிறது.

இதே நிலை நீடித்தால் 6 மாதங்களில் பூ விவசாயம் கேள்விக்குறியாகும்.

விலை சரிவால் பூ விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர் என்றார்.

## கறவைப் பசுக்கள் திட்டத்தால் பால் உற்பத்தி அதிகரிப்பு

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கடந்த 3 ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ள கறவைப் பசுக்கள் திட்டத்தால் சுமார் 7 ஆயிரத்துக்கும் அதிகமான லிட்டர் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக, இதைச் சார்ந்துள்ள குடும்பங்களின் மாத வருவாயும் சராசரியாக அதிகரித்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் ஏழை, நடுத்தர மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில், 5 ஆண்டுகளில் 60 ஆயிரம் கறவைப் பசுக்கள் இலவசமாக அளிக்கப்படுமென முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருந்தார். இதன்படி, மாவட்டங்கள் வாரியாகப் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா ரூ.30 ஆயிரம் மதிப்பிலான கறவைப் பசு அளிக்கப்பட்டு வருகிறது. இதில் அண்டை மாநிலங்களுக்குச் சென்று கறவைப் பசுக்களை வாங்குவதற்கு தலா ரூ.ஆயிரமும், அவற்றைக் கொண்டு வருவதற்கான போக்குவரத்துச் செலவு மாவட்டத்துக்கு ஏற்ப ரூ.2 ஆயிரம் முதல் ரூ.3 ஆயிரம் வரையிலும் வழங்கப்பட்டு வருகிறது.

கால்நடைத் துறை மூலம் அளிக்கப்பட்டு வரும் இலவச கறவைப் பசுக்களுக்கான காப்பீட்டுச் செலவை அரசே ஏற்றுக் கொள்கிறது. இதுதவிர, கறவைப் பசுக்களுக்கு சிறப்பு மருத்துவ முகாம், கால்நடை பசுந்தீவனத்தை ஆவின் மூலம் கிலோ ரூ.16-க்கு கொள்முதல் செய்து ரூ.4 மானியம் அளித்து பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பசுந்தீவனத்துக்கான தொகை, பயனாளிகள் அன்றாடம் கூட்டுறவுச் சங்கங்கள்

மூலம் ஆவின் நிறுவனத்துக்கு அளிக்கும் பாலுக்கான தொகையில் இருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. ஆவின் நிறுவனத்துக்கு இலவச கறவைப் பசுக்கள் மூலம் கொடுக்கும் பாலில் 4.2 சத கொழுப்பு இருந்தால் லிட்டருக்கு ரூ.23 அளிக்கப்படுகிறது. ஆவன் நிறுவனத்துக்கு பயனாளிகள் அளிக்கும் பாலுக்கான தொகை வாரந்தோறும் பட்டுவாடா செய்யப்படுகிறது.

இலவச கறவைப் பசுக்கள் திட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் தலா 150 வீதம் இதுவரையில் ரூ.1.59 கோடியில் 450 கறவைப் பசுக்கள் அளிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், கடந்த 3 ஆண்டுகளில் 315 கன்றுகள் ஈன்றுள்ளதோடு, நாளொன்றுக்கு 3,600 லிட்டர் பால் கூடுதலாக ஆவின் நிறுவனத்துக்கு கிடைத்து வருகிறது. இதற்காக 9 புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அதேபோல, கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் கடந்த 3 ஆண்டுகளில் அளிக்கப்பட்டுள்ள கறவைப் பசுக்கள் மூலம் 300-க்கும் அதிகமான கன்றுகள் ஈன்றுள்ளதோடு, நாளொன்றுக்கு சுமார் 3,500 லிட்டர் பால் கிடைத்து வருகிறது.

தமிழக அரசு செயல்படுத்தி வரும் கறவைப் பசுக்கள் திட்டத்தால் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஏழை, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரம் குடும்பங்கள் வாழ வழி கிடைத்திருப்பதுடன், பால் உற்பத்தியும் கணிசமாக உயர்ந்து வருவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து கிருஷ்ணகிரி ஆவின் நிறுவன அதிகாரிகள் கூறியது: தமிழக அரசு அளித்து வரும் இலவச கறவைப் பசுக்கள் திட்டத்தின் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் ஆவின் நிறுவனத்துக்கு கூடுதலாக நாளொன்றுக்கு 7 ஆயிரம் லிட்டர் பால் கிடைத்து வருகிறது.

இந்தத் திட்டத்தை மேலும் ஊக்குவித்து பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் இலவசமாக சிறப்பு மருத்துவ முகாம்கள், மானிய விலையில் பசுந்தீவனங்களும் அளிக்கப்பட்டு வருகின்றன.

வெண்மைப் புரட்சியை ஏற்படுத்துவதோடு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டத்தால் பால் உற்பத்தியில் தமிழகம் விரைவில் தன்னிறைவை எட்டி விடும் என்றனர் அவர்கள்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

பசுமைக்குடில் தொழில்நுட்பம்



இன்று எங்கு பார்த்தாலும் பசுமைக்குடில் மூலம் விவசாயம் நடக்கிறது. வருடம் முழுவதும் காய்கறிகள், காளான் வளர்ப்பு, நாற்று உற்பத்தி செய்து சம்பாதிக்கின்றனர். அது பற்றி அறிவோம்.

எதையும் உயர்த்திட, தரமான தொழில்நுட்பம் தேவை. கிணற்றில் நீர் இறைக்க மாட்டை பயன்படுத்தினர். மோட்டார் தொழில்நுட்பம் வந்து 300 அடிகளில் இருந்து கூட நீரை இறைத்து விவசாயம் செய்கின்றனர். அப்படிப்பட்ட தொழில்நுட்பம் தான் பசுமை கூடாச விவசாயம் ஆகும்.

90 முதல் 95% பயிர்கள் வயல்வெளிகளில் வளர்க்கப்படுகின்றன. ஆனால் வருடம் முழுவதும் வளர்க்க முடியாது. ஆனால் பசுமைக் கூடாரம் அமைத்தால் வருடம் முழுவதும் விவசாயம் செய்ய இயலும். குளிர்பிரதேசங்களில் அதிகப்படியான குளிரில் இருந்து பயிர் களை தொடர்ந்து காப்பாற்றி, உயர் மதிப்புள்ள பயிர்களை வளர்க்க ""பசுமைக் கூடார தொழில்நுட்ப முறைகள்" உருவாக்கப்பட்டன. காற்று,

குளிர், மழை, அதிக சூரிய ஒளி, அதிக வெப்பம், பூச்சி மற்றும் நோய்களில் இருந்து பாதுகாக்கிறது. பசுமைக் கூடாரம் என்பது ஒளி ஊடுருவக் கூடிய கண்ணாடி அல்லது பிளாஸ்டிக் போர்த்தப்பட்ட அமைப்பாகும்.

இதனுள் தேவையான தட்பவெப்ப நிலை உருவாவதுடன், இரவில் வெளியிடும் கரியமில வாயு உள்ளேயே தங்கி, ஒளிச்சேர்க்கைக்கு உதவுகிறது. விளைச்சல் அதிகமாகிறது. ஈரப்பதம் குறையாது. அதிகநீர் தேவைப்படுவதில்லை. பசுமைக் கூடாக பயன்கள்: பூச்சி, எலி, பறவைகளின் தாக்குதல் இல்லை. வெப்பம், பெரும் மழை, காற்று தடுக்கப்படும். பூச்சி மருந்து / உரங்களின் சரியான பயன்பாடு சாத்தியமாகும். தட்பவெப்பம் கட்டுப்படுவதால் வருடம் முழுவதும் எந்த பயிரையும் பயிர் செய்யலாம். ஆண்டு முழுவதும் காய்கறிகள், கொய்மலர்கள் கிடைப்பதால் லாபம் அதிகமாகிறது.

இதனை அமைக்க சிறிது மேடான இடமாக இருக்க வேண் டும். தேவையான மின்சாரம் கிடைக்க வேண்டும். அருகில் மரம்/ கட்டிடம் இருக்க கூடாது. கிழக்கு - மேற்காக அமைக்க வேண்டும். வாய்க்கால் வடக்கு - தெற்காக அமைய வேண்டும். அமைக்கும் முறை : 4X2 மீ அளவில் செவ்வகமாக உருவாக்கலாம். 4 மூளைகளிலும் இரும்புக் குழாய்களை கான்கிரீட் மூலம் நிறுவ வேண்டும். பின் முடிவுச் சட்டத்தைப் பொருத்த வேண்டும்.

பக்கவாட்டு தாங்கிகளை பொருத்த வேண்டும். பின் தேவைப்படும் குழாய்களை நிறுவ வேண்டும். பின் கூடாரத்தின் மேல் பாலிதீன் தாள் கொண்டு மூட வேண்டும். காற்றோட்ட வசதி, சூடேற்றும் வசதி செய்ய வேண்டும். இதன் மூலம் கொய்மலர்கள், காளான், தரமான நல்ல விளைச்சல்களைப் பயிரிடலாம். கீழ்க்கண்ட வலைத்தளம்

பாருங்கள். www.tnau.ac.in, www.icar.nic.in, www.tn.gov.in

agriculture, www.agritech.ac.in.

- எம்.ஞானசேகர்,

93807 55629

நவீன தொழில்நுட்பம்



நெற்பயிரை தாக்கும் முக்கிய பூச்சிகளின் மேலாண்மை :குருத்துப்பூச்சி : இளம்புழுக்கள் இளம் பயிரின் தண்டில் துளையிட்டு உட்சென்று அதன் அடிப்பாகத்தில் இருந்து கொண்டு உட்பகுதியைக் கடித்து உண்பதால் இளம் பயிரின் நடுக்குருத்து வாடி காய்ந்து விடும். "பூக்கும் பருவத் தில்' கதிர் காய்ந்து மணி பிடிக்காமல் வெண்ணிறக் கதிர்களாக மாறும். வாடிய குருத்து அல்லது வெண்கதிரைப் பிடித்து இருந்தால் எளிதில் வந்து விடும்.

இதனைக்கட்டுப்படுத்த : நாற்று நடுவதற்கு முன் நாற்றுக்களின் நுனியைக் கிள்ளி முட்டைக்குவியல்களை அழிக்க வேண்டும். விளக்குப்பொறி அமைத்தல் (மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை) தாக்குதலைத் தாங்கி வளரக்கூடிய டி.கே.எம் 6, ஐ.ஆர்.8, 20, 26, 36, 40, 56 நெல் இரகங்களைப் பயிரிடலாம். எக்டருக்கு இனக்கவாச்சிப் பொறி 12 வைக்க வேண்டும். டைக்கோ கிரமா ஜப்பானிக்கம் என்னும் முட்டை ஒட்டுண்ணி 5 சிசி / எக்டர், பூச்சி தாக்குதல் பொருளாதார சேத நிலையை அடையும் போது புரபனோபாஸ் 1000 மிலி (அ) பாஸ்போமிடான் 1250 மிலி (அ) புளுபெண்டிமைடு 50 மிலி (அ) கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 15 கிலோ / எக்டர் என்ற அளவில் பயன்படுத்த வேண்டும்.

பொருளாதார சேதநிலை:

ஒரு சதுர மீட்டருக்கு இரண்டு முட்டை குவியல்கள், காய்ந்த நடுக்குருத்து 10 சதம், வெண்கதிர் 2 சதம்.

இலைமடக்குப்புழு:

இளம்புழு தன் உமிழ்நீர் கொண்டு மெல்லிய பட்டுநூல் போன்ற இழைகளால் இலையின் ஓரங்களில் பிணைத்து அல்லது இலையின் நுனிப்பகுதியை அடிப்பகுதியுடன் மடக்கி இணைத்து அதனுள் இருந்து கொண்டு பச்சயத்தைச் சுரண்டி உண்பதால் அப்பகுதி வெண்மையாக மாறி விடும். அதிக அளவு பாதிக்கப்பட்ட பயிரில் இலைகள் வெண்மையான சருகு போல் காணப்படும்.

இதனைக் கட்டுப்படுத்த:

வயல்களில் உள்ள களைச் செடிகளை அகற்ற வேண்டும். விளக்குப்பொறிகள் அமைக்க வேண்டும். (மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை). எம்.டி.யு.3 இரகம் இப்பூச்சிக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. மண்பரிசோதனைப் பரிந்துரைப்படி தழைச்சத்து உரத்தினை 2:3 முறை பிரித்து இடவேண்டும். டிரைகோ கிரம்மா கைலோனிஸ் என்ற முட்டை ஒட்டுண்ணி 5 சிசி / எக்டர் , பொருளாதார சேத நிலையை அடைந்தவுடன் பூச்சிக்கொல்லி குளோர் பைரியாஸ்-1250 மிகி /எக்டர் (எ) புரபனோபாஸ் -1000 மிலி (அ) பாஸ்போ மிடான் - 1250 (அ) டைகுளோரவாஸ் - 625 மிலி (அ) கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 15 கிலோ என்ற அளவில் உபயோகிக்க வேண்டும்.

பொருளாதார சேதநிலை :

இலைச்சேதம் வளர்ச்சிப் பருவத்தில் 10 சதம், பூக்கும் பருவத்தில் 5 சதம்.

கதிர் நாவாய் பூச்சி :

இளம் பூச்சிகளும், வளர்ந்த பூச்சிகளும் நெல்மணிகளைத் துளைத்துச் சாற்றை உறிஞ்சும். இதனால் மணிகளில் மஞ்சள் நிறப்புள்ளிகள் முதலில் தோன்றி பின்னர்

அவை பெரிதாகிப் பழுப்பு நிறமடையும். சாறு உறிஞ்சப்பட்ட மணிகள் சுருங்கி பதராகி விடும். தாக்கப்பட்ட மணிகள் வெள்ளை அல்லது கருப்பு நிறத்தில் காணப்படும். வயலில் ஒருவித துர்நாற்றம் வீசும்.

இதனைக் கட்டுப்படுத்த :

வயலில் உள்ள களைச்செடிகளை அகற்ற வேண்டும். பருவத்தில் ஒரே சமயத்தில் நடவு செய்ய வேண்டும். இது ஒரே சீராகப் பூப்பிடிக்கவும், மணிகள் பால் பிடிக்கவும் ஏதுவாகும். பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தி கட்டுப்படுத்துவது எளிது. பரிந்துரை செய்யப்படுகின்ற தழைச்சத்தை சீராக இடவேண்டும். அதிகமாக தழைச்சத்து இட்ட வயல்வெளியில் பூச்சிகள் அதிக அளவில் உற்பத்தியாகும். முட்டை ஒட்டுண்ணிகளான ஊ என்சிர்டஸ், ஹைடிரோனோடஸ், கிரையான் வகைகளையும், சிசன் டெல்லா போன்ற இறை விழுங்கிகளையும் பாதுகாத்தால் நாவாய் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். பூச்சி தாக்குதல் பொருளாதார சேதநிலையை அடைந்தவுடன் பூச்சிக்கொல்லி மாலத்தியான் - 500 மிலி / எக்டர் (அ) பென்தியான் - 500 மிலி (அ) மாலித்தியான் 5 சதத்தூள் 25 கிலோ என்ற அளவில் பயன்படுத்தலாம்.

பொருளாதார சேதநிலை :

பூக்கும் தருணத்தில் 100 கதிர்களுக்கு 5 பூச்சிகள், பால் பிடிக்கும் தருணத்தில் 100 கதிர்களுக்கு 16 பூச்சிகள். (தகவல் : முனைவர் எ.சுமதி, முனைவர் ம.நிர்மலாதேவி, முனைவர் அ.மணிமாறன், முனைவர் இரா.அகிலா, வேளாண்மை அறிவியல் நிலையம், திரூர் - 6006020, திருவள்ளூர் மாவட்டம், போன் : 044 - 276 20233)

- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

## சம்பங்கி சாகுபடியில் சாதனை படைக்கும் இன்ஜினியர்



கம்ப்யூட்டர் இன்ஜினியராக பணியாற்றியதில் கிடைக்காத வருமானம், மனநிம்மதி, சம்பங்கி சாகுபடியினால் நிறைவாக பெற்று வருவதாக சாதனை விவசாயி மருதமுத்து தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் தவசிமடையை சேர்ந்தவர் மருதமுத்து. மதுரை தியாகராஜர் இன்ஜினியரிங் கல்லூரியில் 1991 ல் பி.இ., முடித்தார். சென்னையில், பல்வேறு நிறுவனங்களில் 15 ஆண்டுகள் பணிபுரிந்தார். வறுமை, கடன் தொல்லையால் விவசாயிகள் தற்கொலை என்ற செய்திகள் இவரது மனதை நெருடியது. தெளிவான திட்டமிடுதல், தொலை நோக்கு பார்வை, புதிய தொழில் நுட்பங்களை கடைபிடிக்காததுதான் விவசாயிகளின் பின்னடைவிற்கு காரணம் என்பதை கண்டறிந்தார். பணியை துறந்துவிட்டு, சொந்த ஊருக்கு வந்தார். பால் உற்பத்தியில் அதிக லாபம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் பசுக்களை வளர்த்தார். பராமரிப்பு, வேலையாட்களுக்கான கூலியால் வருவாய் குறைந்தது. மாவட்டத்தில் பூ விவசாயிகள் அதிக எண்ணிக்கையில் இருப்பதை பார்த்து, அவற்றின் வகைகளை கேட்டறிந்தார். சம்பங்கியில் 20 ரகங்கள் இருப்பதும், அதில் நாட்டு ரகத்தை மட்டுமே விவசாயிகள் சாகுபடி செய்வதை தெரிந்து கொண்டார். வீரிய ரகமான சம்பங்கியை தனது நிலத்தில் சாகுபடி செய்தார். இன்று நாள்தோறும் ரூ. 1500 வருமானம் பார்க்கிறார். விசேஷநாட்களில் சம்பங்கிக்கு அதிக கிராக்கி ஏற்படும். மாதத்தில் 5 நாட்கள் சம்பங்கி விலை கிலோவிற்கு ரூ.600 வரை விற்கப்படும்.

ஒவ்வொரு நாளும் குறைந்த பட்சம் 25 கிலோ பூ, அறுவடை செய்யப்படுகிறது. சாதாரண நாட்களில் கிலோவிற்கு ரூ. 65 கிடைக்கும். கடலை புண்ணாக்கு உட்பட

**இவர் தயாரிக்கும் ஜீவாமிர்தம் என்ற இயற்கை உரம் மற்றும் அறுவடைக்கான கூலி, பூ மார்க்கெட் கொண்டு செல்லும் போக்குவரத்து செலவிற்கு நாள் ஒன்றுக்கு ரூ. 370 செலவாகிறது. அது தவிர நாள் வருமானம் மட்டும் ரூ. 1500 கிடைக்கிறது. விவசாயி வி.ஏ.மருதமுத்து கூறுகையில்,""சம்பங்கி சாகுபடியில் வெற்றிபெற்றவுடன் ஏராளமான விவசாயிகள் இந்த தொழில் நுட்பத்தை கற்றுசென்றுள்ளனர். ஒரே மாதத்தில் ரூ. ஒரு லட்சத்து 20 ஆயிரம் வரை வருமானம் கிடைத்துள்ளது. ஓரளவிற்கு தண்ணீர் பாய்ச்சினால் போதும். பனி, வெயில், மழையால் பாதிப்பு ஏற்படாது," என்றார்.**

***இவரிடம் பேச:*** **97876 42613.**

-எம்.பி.அருள் செல்வன், திண்டுக்கல்

## மேட்டூர் அணை நீர் இருப்பு 27 நாளில் 4 டி.எம்.சி., உயர்வு

**மேட்டூர் :** நீர்வரத்து அதிகரித்ததால், மேட்டூர் அணை நீர் இருப்பு, 27 நாட்களில், 4 டி.எம்.சி., உயர்ந்துள்ளது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் நீடித்த வறட்சியால், மே 7ம் தேதி, மேட்டூர் அணை நீர்மட்டம், 32 அடியாகவும், நீர் இருப்பு, 8 டி.எம்.சி.,யாகவும் சரிந்தது. தமிழக எல்லை நீர்பிடிப்பு பகுதியில், மழை தீவிரம் அடைந்ததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது.

இதனால், மளமளவென சரிந்த அணை நீர்மட்டம், மீண்டும் படிப்படியாக அதிகரிக்கத் துவங்கியது. நேற்று, வினாடிக்கு, 3,800 கனஅடி நீர் வந்த நிலையில், டெல்டா குடிநீர் தேவைக்காக, வினாடிக்கு, 500 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. நீர் திறப்பை விட, நீர்வரத்து கூடுதலாக இருந்ததால், நேற்று, மேட்டூர் அணையின் நீர்மட்டம், 40 அடியாகவும், நீர் இருப்பு, 12 டி.எம்.சி.,யாகவும் இருந்தது.நீர்வரத்து அதிகரித்ததால், 27 நாட்களில், மேட்டூர் அணை நீர்மட்டம், 8 அடியும், நீர் இருப்பு, 4 டி.எம்.சி.,ஆகவும் உயர்ந்துள்ளது.

## சென்னை உட்பட பல இடங்களில் மிதமான மழை

**சென்னை** : சென்னை உட்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், நேற்று முன்தினம் இரவு, மிதமான மழை பெய்தது. இதனால், வடதமிழகப் பகுதிகளில், கடந்த பல நாட்களாக நிலவி வந்த வெப்பம் சற்றே தணிந்தது. வெப்பச்சலனம் காரணமாக, தமிழகத்தின் தென் பகுதிகளில் கோடை மழை பெய்தாலும், சென்னை உட்பட, வடதமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில், கடும் வெப்பம் நிலவி வந்தது. குறிப்பாக, சென்னையில் கடந்த, 10 நாட்களுக்கும் மேலாக, வெப்பம் கடுமையாக இருந்தது. மழைக்கான அறிகுறியே இல்லாத நிலையில், அனல் காற்றிற்கு ஈடு கொடுக்க முடியாமல் மக்கள் திணறி வந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, 9:00 மணிக்கு நிலைமை தலைகீழாக மாறியது. வெப்பம் வாட்டிய, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் மழை மேகம் கூடி, குளிர் காற்று வீசத் துவங்கியது. இரவு, 10:00 மணிக்கு மேல், இடி, மின்னலுடன் லேசான மழை துவங்கி, நள்ளிரவில் படிப்படியாக அதிகரித்தது. நள்ளிரவு, 2:00 மணி வரை மழை நீடித்தது. இதனால், வெப்பத்தின் தாக்கம் குறைந்தது. இதுதவிர, தமிழகத்தின் பல பகுதிகளிலும், நேற்று இடி, மின்னலுடன் மிதமானது முதல் கனமழை வரை பெய்துள்ளது. அதிகபட்சமாக, சேலம் - ஏற்காடு; விழுப்புரம் - கள்ளக்குறிச்சி, 8; தர்மபுரி - மாறந்தஹள்ளி, கிருஷ்ணகிரி - ஓசூர்,7; நாமக்கல், காஞ்சிபுரம், தர்மபுரி - பாலக்கோடு, 6 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. நாமக்கல் - சேந்தமங்கலம், திருவண்ணாமலை- ஆரணி, தர்மபுரி, காஞ்சிபுரம் - கொளப்பாக்கம், நாமக்கல், புதுக்கோட்டை, சேலம் - ஆத்துார், வேலுார் - கலவை, 5 செ.மீ., மழையும் பதிவாகியுள்ளது.சென்னையில், விமான நிலையம், அண்ணாபல்கலை, டி.ஜி.பி. அலுவலகம் பகுதிகளில், 2 செ.மீ., மழை பதிவாகியது.இதுதவிர, தஞ்சை, நீலகிரி, புதுக்கோட்டை, தேடி, விருதுநகர், திருச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும், நேற்று முன்தினம் மழை பெய்துள்ளது. இந்த மழை இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கும்; சில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளது; சென்னையில் ஆங்காங்கே மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை

வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு பருவமழை வங்கக்கடல் மற்றும் அரபிக்கடல் பகுதிகளில், சாதகமான சூழல் நிலவி வருவதால், தமிழகத்தின் சில பகுதிகள் மற்றும் கேரளாவில், அடுத்த, 24 மணி நேரத்தில் தென் மேற்கு பருவமழை துவங்கும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## ஜூன் 5 கேரளாவில் பருவமழை துவக்கம்

**புதுடில்லி** : அடுத்த 48 மணிநேரத்தில் (ஜூன் 5) கேரளாவில் பருவமழை துவங்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு பருவமழையால் மாலத்தீவு மற்றும் தமிழகத்தின் சில இடங்களில் மழை பெறும் என கூறப்பட்டுள்ளது. கடந்த 4 வருடங்களுக்கு பிறகு இந்த ஆண்டு சராசரி அல்லது அதற்கும் அதிகமான அளவு மழை அளவு இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது

## சாதனை ! : வீரிய வெள்ளரி சாகுபடியில் விவசாயிகள்... : செஞ்சியிலிருந்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி

**செஞ்சி:** வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகும் வீரிய வெள்ளரி சாகுபடியில் செஞ்சி விவசாயிகள் சாதனை படைத்து வருகின்றனர்.

செஞ்சி தாலுகாவின் மண் வளம் ஒவ்வொரு கிராமத்திற்கும் மாறுபடுகிறது. மண் வளம் மாறுவதால் தாலுகாவில் அனைத்து பயிர்களும் சாகுபடி செய்யமுடியும். செம்மண் பூமியாக உள்ள மேல்மாம்பட்டு, தொரப்பாடி, ஈயகுணம், எய்யில், தாதங்குப்பம், தாயனூர், கண்டமநல்லூர், மேல் அருங்குணம், புத்தகரம் உட்பட 50க்கும் மேற்பட்ட கிராமங் களில் வெளிநாடுகளுக்கு ஊறுகாய் தயாரித்து ஏற்றுமதி செய்யும் வீரிய வெள் ளரியை (மாத்திரை காய் ) சாகுபடி செய்கின்றனர்.

குறைந்த இடம்

வீரிய வெள்ளரியை 20 சென்ட் முதல் 1 ஏக்கர் வரை ஆடி, கார்த்திகை, சித்திரை என மூன்று பட்டத்தில் சாகுபடி செய்கின்றனர். விதைப்பு முதல் அறுவடை வரை

தேவையான விதை, உரம், பூச்சி மருந்துகளை தனியார் நிறுவனங்கள் சப்ளை செய்கின்றன.

விதைப்பு, கொடிகள் படர வலைகள் அமைக்கின்றனர். விதைத்த பிறகு 30 வது நாள் முதல் அறுவடை துவங்கி விடும். 50 சென்ட் சாகுபடி செய்த நிலத்தில் அறுவடை துவங்கியதும் தினம் நூறு கிலோவில் துவங்கி அதிகளவாக 600 கிலோ வரை மகசூல் உயர்ந்து பிறகு படிப்படியாக குறைகிறது.

சராசரியாக தினசரி 250 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. காய்களை கொள்முதல் செய்யும் நிறுவனங் கள் உற்பத்தி செய்யும் இடத்திலேயே காய்களை வாங்கி செல்கின்றனர். 50 சென்டில் சாகுபடி செய்யும் விவசாயி ஒரு முறை 15 ஆயிரம் கிலோ மகசூல் எடுக்கிறார்.

மூன்று வகை விலை

அளவில் சிறிதாக உள்ள பிஞ்சு காய்களுக்கு கிலோ ஒன்றுக்கு 22 ரூபாயும், அடுத்த ரகத்திற்கு 10 ரூபாய், முற்றிய பெரிய ரகத்திற்கு 3 ரூபாய் தருகின்றனர். சராசரியாக ஒரு கிலோ 12 முதல் 13 ரூபாய் வரை கிடைக்கிறது. இதன்படி 50 சென்ட் பயிரிடும் விவசாயி 1 லட்சத்து 50 ஆயிரம் முதல் 1 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வரை பெறுகிறார். 40 முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. இந்த தொகையை அறுவடை முடிந்த ஒருவாரத்தில் தனியார் நிறுவனங்கள் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தி விடுகின்றனர்.

சொட்டு நீர் பாசனம்

வீரிய வெள்ளரி பயிரிடுவதற்கு குறைந்த அளவு தண்ணீர் போதுமானது. தண்ணீர் பற்றாக்குறை உள்ள இடங்களிலும் விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசன வசதிகளை வெள்ளரி காய்களை கொள்முதல் செய்யும் தனியார் நிறுவனங்கள் செய்து தருகின்றன.

சொட்டுநீர் பாசன வசதியை முறையாக பயன்படுத்தினால் 5 ஆண்டுகள் வரை பயன்படுத்தலாம். இதற்கான தொகையை முதல் சாகுபடி தொகை வழங்கும் போது இந்நிறுவனத்தினர் பிடித்தம் செய்து விடுகின்றன.

ஆட்கள் தேவை

வீரிய வெள்ளரி பயிரிடுவதில் முதல் 30 நாட்கள் வரை விவசாயிகளின் குடும்பத்தினரே அனைத்து வேலைகளையும் செய்கின் றனர். காய் பறிக்க துவங்கிய பிறகு தினமும் 3 முதல் 6 ஆட்கள் வரை தேவைப்படுகிறது. இவர்களுக்கு அரை நாள் கூலியாக நூறு முதல் 120 ரூபாய் வரை வழங்குகின்றனர்.

வெளிநாட்டு வர்த்தகம்

வீரிய வெள்ளரிகளை கொண்டு பெங்களூரு நிறுவனங்கள் ஊறுகாய் தயாரிக்கின்றனர். இவை அமெரிக்க, ரஷ்யா நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. வெளிநாடுகளிள் இதை பயிர் செய்தாலும், சரியாக வளர்த்து தினமும் அறுவடை செய்ய ஆட்கள் இல்லை. எனவே ஒரே முறை மட்டும் சாகுபடி செய்து மொத்தமாக ஒரே நாளில் அறுவடையை முடித்து விடுகின்றனர். இதனால் முதல் தரமான காய்கள் கிடைப்பதில்லை. இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யும் ஊறுகாய்கள் முதல் தரமானது என்பதால் வெளிநாடுகளில் இந்திய ஊறுகாய்களுக்கு கிராக்கி உள்ளது.

தமிழகம் முதலிடம்

இந்த வகை வீரிய வெள் ளரிகளை உற்பத்தி செய்வதில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. இதில் செஞ்சி தாலுகா மேல்மாம்பட்டு கிராமத்தில் இருந்து ஆண்டுக்கு நான்காயிரம் டன் உற்பத்தி செய்கின்றனர். வறண்ட பகுதியான செஞ்சி பகுதியில் குறைந்த தண்ணீர் செலவில் நிறைந்த வருவாய் ஈட்டும் விவசாயிகள் சத்தமின்றி இந்தியாவிற்கு கணிசமான அன்னியச்செலானியை ஈட்டி தந்து வருகின்றனர்.

## ஆதங்கம் ! : காய்கறி, பூ சாகுபடி செய்யும் விவசாயிகள்... : தோட்டக் கலைத் துறை ஒத்துழைப்பு தேவை

**தியாகதுருகம்:** தியாகதுருகம் ஒன்றிய கிராமங்களில் பூ சாகுபடி செய்வது விவசாயிகளிடம் அதிகரித்து வருவதால் போதிய ஆலோசனை வழங்கி ஊக்கப்படுத்த தோட்டக் கலைத் துறையினர் ஒத்துழைப்பு இல்லை என விவசாயிகள் ஆதங்கப்படுகின்றனர்.

தியாகதுருகம் பகுதியில் உள்ள கிராமங்களில் நெல், கரும்பு, மஞ்சள், மரவள்ளி, பருத்தி ஆகிய பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இரு ஆண்டுகளாக போதிய மழை பெய்யாததால் ஆண்டு பயிராக உள்ள கரும்பு, மரவள்ளி, மஞ்சள் ஆகியவற்றை நீர்பாய்ச்சி காப்பாற்ற முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

குறுகிய கால பயிர்கள்

இதற்கு மாற்றாக குறுகிய காலத்தில் வளர்ந்து பலன் தரக்கூடிய காய்கறி பயிரிடுவதில் கவனம் செலுத்துகின்றனர். இதற்கு அடுத்தது பூ சாகுபடி செய்வதும்

இப்பகுதியில் சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. சாமந்தி, கோழிக்கொண்டை, கனகாம்பரம், சம்மங்கி ஆகிய பூச்செடிகளை பயிரிட்டு இதன் மூலம் சிலர் கனிசமான வருவாய் ஈட்டி வருகின்றனர். பூக்களை அறுவடை செய்ய ஆட்களை நம்பி இருக்க வேண்டியுள்ளதால் குடும்ப உறுப்பினர்களின் ஒத்துழைப்பு உள்ள விவசாயிகள் பூச்செடி சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஒரு ஏக்கர் பரப்பில் கனகாம்பரம் செடிகளை நடவு செய்து தினசரி 1,000 ரூபாய் வரை வருவாய் ஈட்டி வருகின்றனர்.

ஒத்துழைப்பு இல்லை

பருவத்திற்கு ஏற்றபடி வெண்டை, கத்தரி, தக்காளி, மிளகாய், புடலை, பாகற், பீர்க்கன் உள்ளிட்ட காய்கறி சாகுபடி செய்வதும் அதிகரித்து வருகிறது. இவர்களுக்கு தோட்டக்கலைத்துறையினர் போதிய ஒத்துழைப்பு அளித்து அரசு சலுகைகளை வழங்குவதில்லை என்று விவசாயிகள் ஆதங்கப்படுகின்றனர்.

கனகாம்பரம் பூச்செடி சாகுபடி செய்துள்ள சித்தலூரை சேர்ந்த விவசாயி ஆறுமுகம் கூறியதாவது:

எனது வயலில் கனகாம்பரம், சம்பங்கி சாகுபடி செய்துள்ளேன். தினம் பறிக்கும் பூக்களை விருத்தாச்சலம் மார்கெட்டுக்கு பஸ்சில் அனுப்புகிறேன். தற்போதய நிலவரப்படி ஒரு கிலோ கனகாம்பரம் பூ 150 ரூபாய்க்கு எடுத்துக் கொள்கின்றனர். செடிகளை பராமரிக்கவும், அதிக மகசூல் கிடைக்கவும் நாங்களே முயற்சி எடுத்து நுணுக்கங்களை தெரிந்து பராமரித்து வருகிறோம். இதற்காக அரசு வழங்கும் சலுகை எதுவும் இது வரை எங்களுக்கு கிடைக்கவில்லை. தோட்டக்கலைத்துறை ஊழியர்கள் யாரும் எங்களை அணுகி சாகுபடி அபிவிருத்திக்கு எந்த உதவியும் செய்யவில்லை. இதனால் பூச்செடிகளை ஆர்வமுடன் பயிரிடும் எங்களுக்கு ஏமாற்றம் அளிக்கிறது. சலுகை விலையில் அரசு வழங்கும் இடுபொருள், நுண்ணுரம், பூச்சிமருந்து, தெளிப்பான், விதை உள்ளிட்டவைகளை வழங்கி ஊக்குவித்தால் இப்பகுதியில் காய்கறி, பூ சாகுபடி செய்ய விவசாயிகள் பலர் முன்வருவார்கள். இவ்வாறு விவசாயி ஆறுமுகம் தெரிவித்தார்.

நடவடிக்கை தேவை

தண்ணீர் பற்றாக்குறை உள்ள இச்சூழலில் மாற்று பயிர் மூலம் விளைபொருட்களின் உற்பத்தியை பெருக்க பாடுபடும் விவசாயிகளை ஊக்குவித்து போதிய ஆலோசனை வழங்கிட வேளாண் மற்றும் தோட்டக்கலை துறையினர் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**<u>இந்திய மிளகாய்க்கு சவுதி அரேபியா தடை</u>**



**கொச்சி:**இந்திய பச்சை மிளகாய் இறக்குமதிக்கு, சவுதி அரேபிய அரசு, தடை விதித்துள்ளது.வேளாண் சாகுபடியை அதிகரிக்க, ரசாயன உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகளை இந்திய விவசாயிகள் அதிகம் பயன்படுத்துவதாக, சவுதி அரேபியா ஏற்கனவே புகார் தெரிவித்து வந்தது.இதையடுத்து, இந்திய பச்சை மிளகாயில், நிர்ணயிக்கப்பட்ட அளவை விட, பூச்சி கொல்லி மருந்து அதிகம் உள்ளதால், அதன் இறக்குமதிக்கு தடை விதிக்கப்படும் என, சவுதி வேளாண் அமைச்சகம் எச்சரித்திருந்தது.

இதை தொடர்ந்து, இந்திய வேளாண் மற்றும் பதப்படுத்தல் உணவு பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (அபெடா), பச்சை மிளகாய் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு, ஏற்றுமதியாளர்களை கேட்டுக் கொண்டது.இந்நிலையில், தரக் குறைபாடு காரணமாக, இந்திய பச்சை மிளகாய் இறக்குமதிக்கு, சவுதி அரேபியா தடை விதித்துள்ளது.

கடந்த வாரம் அமலுக்கு வந்துள்ள இந்த தடையால், இந்தியாவில் இருந்து அந்நாட்டிற்கு அனுப்பப்பட்ட ஆறு டன் பச்சை மிளகாயை இறக்குமதி செய்ய, சுங்க இலாகாவினர் அனுமதி மறுத்துள்ளனர்.கடந்த மாதம், ஐரோப்பிய கூட்டமைப்பு, இந்திய அல்போன்சா மாம்பழம் மற்றும் நான்கு வகை காய்கறிகளுக்கு தடை விதித்தது. இந்நிலையில், சவுதியில், இந்திய பச்சை மிளகாய்க்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால், ஏற்றுமதியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## துவக்கம் ! : முந்திரி ஒட்டுச் செடிகள் உற்பத்தி... : தோட்டக்கலைப் பண்ணையில் தீவிரம்

**விருத்தாசலம்:** விருத்தாசலம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில், 3 லட்சம் முந்திரி ஒட்டுச் செடிகள் உற்பத்தி செய்யும் பணி துவங்கியது. மாவட்டத்தில் விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி, வடலூர், குறிஞ்சிப்பாடி, அண்ணாகிராமம் பகுதிகளில் ஒரு லட்சம் ஏக்கரில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டது. கடந்த 2011 டிசம்பர் 30ம் தேதி வீசிய "தானே' புயலில் ஒரு கோடிக்கும் அதிகமான முந்திரி மரங்கள் வேருடன் சாய்ந்தன. அதைத் தொடர்ந்து "தானே' புயல் மறுவாழ்வு திட்டத்தில், புயலால் பாதித்த விவசாயிகளுக்கு விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலையம், வனத்தோட்டக் கழகம், தோட்டக்கலைத் துறை, நெய்வேலி தோட்டக்கலைத் துறை மற்றும் அங்கீகாரம் பெற்ற தனியார் நர்சரிகள் மூலம் 25 லட்சம் முந்திரி கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, வழங்கப்பட்டது. தற்போது, "தானே' புயல் மறுவாழ்வுத் திட்டத்தில் குழாய் கிணறு அமைத்து, சொட்டுநீர் பாசனம் மூலம் முந்திரி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வழங்க விருத்தாசலம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் 3 லட்சம் முந்திரி ஒட்டுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிமொழி கூறுகையில், "புயல் பாதித்த விவசாயிகளுக்கு "தானே' மறுவாழ்வுத் திட்டத்தில் குழாய் கிணறு அமைக்க தனி நபருக்கு (15 ஏக்கர் நிலம்) 50 சதவீத மானியமாக 3.8 லட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. அதன் மூலம் பாதித்த முந்திரி மரங்களை முழுமையாக அகற்றிவிட்டு வி.ஆர்.ஐ., -3 ரக ஒட்டுச் செடிகள் நட்டு, சொட்டுநீர் பாசனம் மூலம் பராமரிக்க வேண்டும். முந்திரி ஒட்டுச் செடிகள், நடவு கூலி, பராமரிப்பு செலவுக்கு மானியம்; சொட்டு நீர் பாசனத்திற்கு 75 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டுக்கு "தானே' புயல் மறுவாழ்வுத் திட்டம் மற்றும் தேசிய தோட்டக் கலை இயக்கம் சார்பில் விருத்தாசலம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் 3 லட்சம் வி.ஆர்.ஐ., -3 ரக முந்திரி ஒட்டுச் செடிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. வரும் ஆகஸ்டு மாத இறுதியிலிருந்து விவசாயிகளுக்கு வழங்கப்படும்' என்றார்.

## அதிக அளவு மழையாக பவானிசாகரில் பதிவு

**ஈரோடு:** பவானிசாகரில், நேற்று முன்தினம், மாவட்டத்தில் அதிகபட்சமாக, மழையளவு பதிவானது. ஈரோடு மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக, பரவலாக

மழை பெய்து வருகிறது. ஈரோடு, பெருந்துறை, கவுந்தப்பாடி, கோபி போன்ற பகுதிகளில், மழை பொழிவு இருந்து வந்தது. அக்னி நட்சத்திர வெயில் காலத்தில், கொடுமுடி, சிவகிரி உள்ளிட்ட பகுதிகளில், அதிகமாக மழை பெய்தது. அதன்பின், பரவலாக, மாவட்டத்தின் அனைத்து பகுதியிலும், பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு, மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் மழை பதிவானது. மின்னல் அதிகளவில் இருந்தது. பவானிசாகரில், 14 மி.மீட்டர் என அதிகப்பட்சமாக, மழை பதிவானது. மேட்டூரில், 5.2, சத்தியமங்கலம், 4.2, கொடிவேரி, 5, எலந்தகுட்டைமேடு, 12, பெருந்துறை, 5, புங்கம்பாடி, 4, ஈரோடு, 2 மி.மீ., மழையளவு பதிவானது. பரவலாக மழை இருந்த போதிலும், பகல் நேரத்தில் வெயில் சுட்டெரித்து வருகிறது. கோடை காலத்தை போன்ற நிலையே நீடித்தது.

## பசுமைக்குடில் சாகுபடிக்கு ரூ.18 லட்சம் மானியம்

**ராமநாதபுரம்:**ராமநாதபுரம் மாவட்டத்தில் பசுமைக்குடில் என்ற புதிய தொழில்நுட்பத்தில் சந்தை மதிப்பு மிகுந்த காய்கறிகளான ஒட்டு வெள்ளரி, குடை மிளகாய் சாகுபடி செய்யலாம்.

இத்திட்டத்தில் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்து நான்கிலிருந்து 5 மடங்கு கூடுதல் மகசூல் பெறலாம். பசுமை குடிலில் ஆண்டுக்கு மூன்று முறை வெள்ளரி பயிரிடலாம். ரூ.10 லட்சத்தில் 10 ஆயிரம் சதுர அடி பரப்பில் பசுமை குடில் அமைத்து வெள்ளரி சாகுபடி செய்தால், ஆண்டுக்கு 40-45 டன் மகசூலில் ரூ.9 லட்சம், இரண்டாம் ஆண்டிலிருந்து செலவுகளின்றி நிகர வருமானம் ரூ.7 லட்சம் கிடைக்கும்.

இத்திட்டத்திற்கு ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்க திட்டம் மூலம் மானியம் அளிக்கப்படுகிறது. பயனாளிகள் அதிகபட்சம் 40 ஆயிரம் சதுர அடி சாகுபடிக்கு ரூ.18 லட்சம் மானியம் பெறலாம். ஆர்வமுள்ள விவசாயிகள், தோட்டக்கலை துணை இயக்குனர், வட்டார உதவி இயக்குனர்கள் அல்லது 04567 230328ல் தொடர்பு கொள்ளலாம்

## கால்நடைகளுக்கான மானிய விலை; உலர் தீவன மைய திட்டம் விஸ்தரிப்பு

**காஞ்சிபுரம் :** காஞ்சிபுரம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான உலர் தீவன மையம், புதிதாக உத்திரமேரூரில் திறக்கப்பட உள்ளது.

தமிழகமெங்கும் வறட்சி காரணமாக, கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறை ஏற்பட்டது. மேலும், தீவன பற்றாக்குறை மற்றும் தீவன விலை கடுமையாக உயர்ந்தது. இதனால், தமிழகம் எங்கும் கால்நடைகளுக்கான உலர் தீவன மையங்களை, கால்நடைத் துறை கடந்த பிப்ரவரி மாதம் திறந்தது. அந்த வகையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஐயம்பேட்டை, நந்திவரம், மதுராந்தகம், சிட்லப்பாக்கம் ஆகிய நான்கு இடங்களில், உலர் தீவன மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களில் ஒரு கிலோ வைக்கோல், இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுவதால், கால்நடை விவசாயிகளிடம் வரவேற்பை பெற்றது. கடந்த நான்கு மாதங்களில் இந்த மையங்களில், 198 டன் வைக்கோல் விற்பனை நடைபெற்றுள்ளது.

இந்த நிலையில், மாவட்டத்தில், மேலும் ஒரு உலர் தீவன மையத்தை திறக்க, கடந்த மார்ச் மாதம் கால்நடைத்துறை உத்தரவிட்டது. லோக்சபா தேர்தல் காரணமாக, மையத்தை உடனடியாக திறக்க முடியவில்லை. தற்போது, உத்திரமேரூர் கால்நடை மருந்தகத்தில், 9 லட்ச ரூபாய் மதிப்பில் உலர் தீவன மையத்தை, கால்நடைத் துறை ஒரு வாரத்தில் துவக்கவுள்ளது. எனினும், திருக்கழுக்குன்றம் மற்றும் திருப்போரூர் ஆகிய பகுதி கால்நடை விவசாயிகள், உலர்தீவனத்திற்காக, செங்கல்பட்டு அடுத்த நந்திவரம் மையத்திற்கு 30 கி.மீ., தொலைவு சென்று வர வேண்டியுள்ளது. எனவே, திருக்கழுக்குன்றம் பகுதியில் ஒரு மையத்தை திறக்க வேண்டும் என, கால்நடை விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள நான்கு மையங்களில் வைக்கோல் விற்பனை அளவு:

| மையம் | அளவு (டன்) |
|---|---|
| ஐயம்பேட்டை | 78 |
| சிட்லப்பாக்கம் | 88 |
| நந்திவரம் | 26 |
| மதுராந்தகம் | 6 |

## கால்நடை மருத்துவ முகாம்

**செஞ்சி:** செஞ்சி ஒன்றியம் பாக்கம் கிராமத்தில் விலையில்லா வெள்ளாடுகளுக்கான குடல் புழு நீக்கம், உடல் பரிசோதனை, பொது சோதனை மருத்துவ முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் அஞ்சலை செல்வக்குமார் முகாமை துவக்கி வைத்தார்.

சத்தியமங்கலம் கால்நடை மருந்தக கால்நடை மருத்துவர் துரைமுருகன், உதவியாளர் இளையராஜா சிகிச்சையளித்தனர். 164 விலையில்லா வெள்ளாடுகளுக்கும், 86 பிற கால்நடைகளுக்கும் சிகிச்சை அளித்தனர். ஊராட்சி செயலாளர் செல்வக்குமார் , துணை தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## விதை கிராம திட்டத்தில் 100 டன் விதைக்க தீவரம் : பண்டமாற்று முறையில் பகிர்ந்து கொள்ளலாம்

**காரைக்குடி:**விதை கிராம திட்டத்தின் கீழ், சிவகங்கை மாவட்டத்தில், 100 டன் விதைநெல் விதைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறு, குறு விவசாயிகள், சான்றளிக்கப்பட்ட, விதைகளை சம்பந்தப்பட்ட ஒன்றிய வேளாண் அலுவலகத்தில் பெற்று பயன்படுத்துகின்றனர். ஐந்து ஏக்கருக்கு மேற்பட்டவர்கள், விலை கொடுத்து, விற்பனை நிலையங்களில், விதை நெல் வாங்குகின்றனர்.

இதனால் விவசாயிக்கு கூடுதல் செலவாகிறது. விளைச்சலும் மண்ணின் தரத்துக்கு ஏற்ப அமைவதில்லை. எனவே, அந்தந்த கிராமங்களிலேயே, குறிப்பிட்ட விவசாயியை தேர்வு செய்து, அவர்களிடம் விதை நெல்லை வழங்கி, விவசாயம் செய்து வழங்க, வேளாண்துறை விதை நெல் கிராம திட்டத்தை தொடங்கியுள்ளது.

சிவகங்கை மாவட்டத்திலுள்ள 12 ஒன்றியங்களிலும், குறிப்பிட்ட விவசாயிகளிடம், வேளாண்மை துறையால் சான்றளிக்கப்பட்ட விதைகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படும். அவர்கள், தங்கள் நிலத்தில், விதை நெல் உற்பத்தி செய்வார்கள். விதைநெல், வளர்ப்பது குறித்த பயிற்சியும், அதை பதப்படுத்துவதற்குரிய பயிற்சியும் வழங்கப்படும்.

சிவகங்கை மாவட்டத்தில், 100 டன் விதை நெல், 4 டன் தானிய விதைகள், 5 டன் பயறு வித்து, 20 டன் எண்ணெய் வித்து வழங்கி விதை நெல் விளைவிக்கப்பட உள்ளது. சாக்கோட்டை ஒன்றியத்தில், 8 டன் நெல், 0.4 டன் தானியம், 0.4 பயறு வகை விதைகள் விதைக்கப்பட உள்ளது.

வேளாண் அதிகாரி ஒருவர் கூறும்போது: விதை கிராம திட்டம் மூலம், விவசாயிகளுக்கு, தங்கள் பகுதியிலேயே, தங்கள் மண்ணில் விளைந்த விதை நெல் கிடைக்கும். இதனால், வெளியே வாங்கும் விதையை விட, விளைச்சல் அதிகரிக்கும். விதை நெல் விவசாயத்துக்கு, வேளாண்மை துறையினர்,

ஒத்துழைப்பு அளிப்பதால், விவசாயிகள் கூடுதல் விதை நெல்லை, விளைவிக்க முடியும், என்றார்.

## கோழி தீவனமாகும் மத்தி மீன்கள்

**புதுச்சேரி:** கோழி தீவனத்திற்காக கடற்கரையில் டன் கணக்கில் மத்தி மீன்கள் உலர வைக்கப் பட் டுள்ளன. புதுச்சேரியில் மீன்பிடி தடைக்காலம் அமலில் இருந்தபோது, மீனவர்கள் பைபர் மற்றும் சிறிய படகுகளில் கடலில் குறைந்த துாரத்தில் சென்று மீன் பிடித்தனர். வலையில் அதிக அளவில் மத்தி மீன்கள் சிக்கின. இந்த மீன்களை மொத்தமாக விலைக்கு வாங்கிய கேரள மற்றும் தமிழக வியாபாரிகள், இவற்றை, கடற்கரையோரம் மணலில் காய வைத்து, கோழி தீவனத்திற்கு கருவாடாக எடுத்துச் செல்கின்றனர். பொம்மையார்பாளையம் கடற்கரையில் 4 டன் அளவிற்கான மத்தி மீன்கள், கடந்த சில நாட்களாக காய வைக்கப்பட்டது.

## நா.பேட்டையில் மஞ்சள் ஏலம்: ரூ. 24 லட்சத்துக்கு விற்பனை

**ராசிபுரம்:** நாமகிரிப்பேட்டை, வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 24 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்க்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில், மஞ்சள் ஏலம் நடக்கும். தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிக ள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர். நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 967 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 7,469க்கும், குறைந்த பட்சம், 5,777 ரூபாய்க்கும் ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 6,400க்கும், குறைந்த பட்சம், 5,299 ரூபாய்க்கும் ஏலம்போனது. பனங்காலி ரகம், அதிக பட்சம், 16 ஆயிரத்து, 400க்கும், குறைந்த பட்சம், 9,869 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 42 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## வீட்டு மனையாகும் மேய்ச்சல் நிலம் : பசுந்தாள் தீவனத்துக்கு தட்டுப்பாடு

**தர்மபுரி:** தர்மபுரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் வீட்டு மனைகளாக மாறி வருவதால், பசுந்தாள் தீவன தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் விவசாய சார்பு தொழிலாக கால்நடை வளர்ப்பு தொழில் இருந்து வருகிறது. நீண்ட கால முதலீடுகளாக கால்நடைகளை நம்பியுள்ள விவசாயிகள், மாடுகளுக்கு தினசரி சரிவிகித உணவை தரமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் அரசின் புறம்போக்கு நிலங்களில், 32 சதவீதம் கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாக உள்ளன. கால்நடைகளுக்கு வழங்கும் உணவில் தினம், 60 சதவீதம் பசுந்தீவனங்களை அளித்தால் மட்டுமே, கறக்கும் பாலின் அளவு மற்றும் சினை பருவம் ஆகியவை முழு பலனை அளிக்கும். கால்நடைகளுக்கான உணவு விகிதத்தில், கலப்பு தீவனங்கள் முக்கிய பங்கு வகித்தாலும், தீவனங்களின் விலை உயர்வால், பசுந்தீவனங்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது.

நகரமயமாதலின் அசுர வளர்ச்சியால், தர்மபுரி மாவட்டத்தில் முக்கிய மேய்ச்சல் நிலங்களில், தனியாரின் ஆக்கிரமிப்பு மற்றும் விளை நிலங்களில் குடியிருப்புகள் அதிகரித்து வருகிறது. ரியல் எஸ்டேட் ஏஜன்ட்டுகளில் போட்டியால், மாவட்டத்தில் குறிப்பாக, தர்மபுரி நகரத்தை சுற்றியுள்ள விளை நிலங்களின் மதிப்பு அதிகரித்து உள்ளது.

விவசாயிகள் தங்களிடம் உள்ள விளை நிலங்களை ரியல் எஸ்டேட் ஏஜண்டுகளிடம் விற்று பணத்தை வங்கியில், டெபாஸிட் செய்து வருகின்றனர். கால்நடைகளின் முக்கிய மேய்ச்சல் நிலமாக இருந்த நகரத்தின் ஒதுக்குப்புறம் மற்றும் புறம்போக்கு நிலங்கள் குடியிருப்புகளாக மாற்றப்பட்டு உள்ளதால், ஆடு மற்றும் மாடுகளை மேய்க்க முடியாமல், ஒரு இடத்தில் கட்டிபோட்டு புல் கட்டுகளை மட்டும் முழு உணவாக அளித்து வருகின்றனர்.

இதனால், மாடுகளுக்கு சரிவிகித உணவு குறைந்து, அவற்றுக்கு உடல் நல பாதிப்புகள் ஏற்பட்டு வருகிறது. மேலும், தினசரி கறக்கும் பாலின் அளவும் குறைந்து வருகிறது. அரசு கால்நடைகளுக்கு, மானிய விலையில் கலப்பு தீவனங்களை வழங்கி வந்ததும், படிப்படியாக குறைத்து விட்டது. தனியாரிடம் வாங்கப்படும் தீவனங்களான, புண்ணாக்கு, அரிசி தவிடு, வைக்கோல் பிரி, புல்கட்டு ஆகியவற்றின் விலை உயர்ந்ததால், கால்நடைகளை பராமரிக்க முடியாமல் விவசாயிகள் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இதுகுறித்து, விவசாயிகள் சிலர் கூறியதாவது:

பால் மூலம் கிடைக்கும் வருவாயில், 75 சதவீதம் மாடுகளுக்கு வழங்கும் தீவன செலவுக்கு சென்று விடுகிறது. மேய்ச்சல் நிலம் முழுவதும் குடியிருப்புகளாக மாறி விட்டது. ஏரி பகுதி மற்றும் ஒதுக்குப்புறம் உள்ள மேய்ச்சல் நிலத்தில் ஆக்கிரமிப்புகள் அதிகரித்து விட்டது. பசுந்தீவனங்கள் வழங்க முடியாத நிலையில், கால்நடைகளை பராமரிக்க முடியாமல் குறைந்த விலைக்கு விற்று வருகிறோம், என்றார்.

## கம்பு விளைச்சல் ஜோர்: விவசாயிகள் மகிழ்ச்சி

**தர்மபுரி:** மாவட்டத்தில் பெய்த கோடை மழையின் காரணமாக, கம்பு சாகுபடி அதிகரித்து உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில் விவசாயிகள் கம்பு, கேழ்வரகு உள்ளிட்ட சிறு தானிய பயிர்களை ஆண்டு முழுவதும் மானாவாரியாகவும், இறவை பாசனத்திலும் சாகுபடி செய்து வருகின்றனர். குறிப்பாக, பென்னாகரம் பகுதியில் விவசாயிகள் கம்பு சாகுபடியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டத்தில், கோடை மழையை எதிர்பார்த்து பென்னாகரம் பகுதியில், அதிகளவில் விசாயிகள் கம்பு சாகுபடியில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், மாவட்டத்தில் கோடை கால துவக்கத்தில், விவசாயிகள் எதிர்பார்த்தபடி, கோடை மழை பெய்யவில்லை. இதனால், கம்பு கதிர் விடும் நேரங்களில், போதிய பாசன வசதியின்றி, கதிர்களில் பால் விடுவது குறைந்து காணப்பட்டதால், விவசாயிகள் கவலை அடைந்தனர். இந்நிலையில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், கடந்த சில தினங்களாக பெய்து வரும் கோடை மழையின் காரணமாக, கம்பு உள்ளிட்ட விவசாயிகள் சாகுபடி செய்த பயிர்களுக்கு பாசன வசதி கிடைத்தது. குறிப்பாக, கோடை மழையின் காரணமாக, கம்பு பயிர் நன்கு கதிர் விட்டு வளர்ந்துள்ளது. மேலும், தென்மேற்கு பருவமழை, விரைவில் துவங்க உள்ளதால், கம்புக்கு தேவையான பாசன வசதி கிடைக்க வாய்ப்பு உள்ளது. இதனால், கோடையில், சாகுபடி செய்த கம்பு சாகுபடியில் அதிக மக'ல் கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர் பார்த்து உள்ளனர். மேலும், கம்புக்கு சந்தையில் நல்ல விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## முருங்கை காய் விலை இரட்டிப்பானது; விவசாயிகள் மகிழ்ச்சி

**ஒட்டன்சத்திரம்:**ஒட்டன்சத்திரத்தில் முருங்கை காய் விலை இரட்டிப்பானதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஒட்டன்சத்திரம், அத்திக்கோம்பை, சாலைப்புதுார், அம்பிளிக்கை ஆகிய கிராமங்களிலும், அதை சுற்றியுள்ள கிராம பகுதிகளிலும், செடி முருங்கை அதிகமாக பயிரிடப்பட்டுள்ளது. சுபமுகூர்த்த காலமாக இருப்பதால், விசேஷங்களில் விருந்துக்கு, முருங்கையின் பயன்பாடு அதிகரித்துள்ளது.

இந்த வாரம் தேவைக்கேற்ப வரத்து இல்லாததால், முருங்கைக் காய்களை வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு வாங்கி வருகின்றனர். இதனால், விலை கிடு கிடு வென உயர்ந்து வருகிறது.

சென்ற வாரம் வரை ஒரு கிலோ முருங்கை ரூ.14 க்கு விற்றது. கடந்த 3 நாட்களுக்கு முன்பு கிலோ ரூ.20 க்கும், நேற்று முன்தினம் ரூ.25 க்கும் விற்றது. நேற்று தேவை பல மடங்கு அதிகரித்ததால், விலை கிலோவிற்கு ரூ.3 வரை அதிகரித்து, ரூ.28 க்கு விற்றது.

கடந்த வாரம் விலையை காட்டிலும், இரட்டிப்பு விலை கிடைத்துள்ளதால் முருங்கை பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 272 மி.மீட்டர் மழைப்பதிவு

**ஓசூர்:** கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும், 272 மில்லி மீட்டர் மழை பெய்தது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வெப்பம் சலனம் காரணமாக, கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக, சூறாவளி காற்றுடன் கனமழை பெய்து வருகிறது. கடந்த இரு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு, கனமழை கொட்டி வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். ஆனால், கடும் சூறாவளி காற்று காரணமாக, பசுமை குடில்களை இழந்துள்ள ரோஜா விவசாயிகள் மட்டும், அரசு நிவாரணம் கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர். இருந்த போதிலும், கடும் வறட்சியின் பிடியில் சிக்கி தவித்த, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தற்போது கோடை மழை பெய்து வருவதால், நிலத்தடி நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. மேலும், கடும் வறட்சி காரணமாக பசுமையை இழந்து வாடி வந்த கிருஷ்ணகிரி மாவட்ட வனப்பகுதிகள், மீண்டும் துளிர் விட்டு புத்துயிர் பெற்றுள்ளன. தொடர்ந்து மழை பெய்து வருவதால், கடந்த இரு ஆண்டுக்கு பின், மீண்டும் விவசாயிகள் ஆர்வமுடன் நிலங்களை உழுது வருகின்றனர். சூளகிரி

மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் விவசாய பணிகள் களை கட்டி உள்ளது. இந்நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த, 2ம் தேதி மட்டும், 272 மில்லி மீட்டர் மழை பதிவானது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பதிவான மழை அளவு விபரம் வருமாறு:

பாரூர், 15.2 மி.மீட்டர், தேன்கனிக்கோட்டை, 27.2 மி.மீட்டர், ஓசூர்,69 மி.மீட்டர், கிருஷ்ணகிரி,25 மி.மீட்டர், அஞ்செட்டி, 39 மி.மீட்டர், ஊத்தங்கரை,9 மி.மீட்டர், தளி,17 மி.மீட்டர், பெனுகொண்டபுரம், 16.2 மி.மீட்டர், சூளகிரி,6 மி.மீட்டர், நெடுங்கல், 27.4 மி.மீட்டர், ராயக்கோட்டை, 11 மி.மீட்டர், போச்சம்பள்ளி, 10 மி.மீட்டர் என மொத்தம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த, 2ம் தேதி மட்டும், 272 மில்லி மீட்டர் மழை பதிவாகிட உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாய உர கடன் ரூ.150 கோடியாக உயர்வு அமைச்சர் செல்லூர் ராஜூ தகவல்**

**மதுரை,** : விவசாயிகளுக்கு உரத்திற்கான கடன் ரூ.150 கோடி வரை வழங்கப்பட உள்ளது என கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் ராஜூ தெரிவித்தார். மதுரையில் 5 மாவட்டங்களை சேர்ந்த கூட்டுறவுத்துறை முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆய்வு கூட் டம் நேற்று மதுரை மாவ ட்ட மத்திய கூட்டுறவு வ ங்கி அலுவலகத்தில் நட ந்தது. கூட்டத்திற்கு தலை மை வகித்த கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் ராஜூ பேசியதாவது: கடந்த 3 ஆண்டுகளில் ராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட 5 மாவட்டங்களில் குறுகிய கால பயிர் கடனாக 30 லட்சத்து 2 ஆயிரத்து 240 விவசாயிகளுக்கு ரூ.12165.23 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.மேலும் அரசு மானியத்துடன் உழவு இயந்திரம், கதிர் அடிக்கும் இயந்திரம் ஆகியவை ரூ.25 கோடியே 60 லட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. பண்ணைப்பசுமை நுகர்வோர் கடைகள் மூலமாக 34

லட்சத்து 64 ஆயிரத்து 889 கிலோ காய்கறிகள் ரூ.9.27 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.உரிய காலத்தில் பயிர் கடனை திருப்பிச் செலுத்தியதற்காக விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாய பணிகள் துவங்கி உள்ளதால் டிஏபி, யூரியா மற்றும் பொட்டாஷ் உரங்கள் விவசாயிகளுக்கு கூட்டுறவு கடன் சங்கம் மூலம் வழங்கப்பட உள்ளது. வட்டியில்லா கடனாக ரூ.150 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார். தமிழக அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஜக்கையன், கூட்டுறவுத்துறை இணை பதிவாளர் பழனிவேல், ராமநாதபுரம், நெல்லை, சிவகங்கை, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவுத்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

## தென்னை நார் கழிவுகளை கம்போஸ்ட் உரமாக பயன்படுத்தலாம் விவசாயிகளுக்கு யோசனை

**சேதுபாவாசத்திரம்:** சேதுபாவாசத்திரம், பேராவூரணி வட்டாரங்களில் சாலையோரங்களில் குவியலாக கிடக்கும் தென்னைநார் கழிவுகளை மக்கச்செய்து கம்போஸ்ட் உரமாக பயன்படுத்தலாம் என்று விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட் டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை:கம்போஸ்ட் உரம் தயாரிக்க 100 கிலோ தென்னை நார் கழிவு 1 டன் புளூரோட்டஸ் காளான்வித்து 1 கிலோ, யூரியா 5 கிலோ எடுத்து கொண்டு முதலில் தென்னை நார்கழிவை 5 மீட்டர் இன்ட் 3 மீட்டர் நீள அகலமுடைய மேடான நிலப்பரப்பில் சமமாக பரப்ப வேண்டும். அதன்மேல் 200 கிராம் புளூரோட்டஸ் காளான் வித்துகளை சீராக பரப்ப வேண்டும். பின்னர் தண் ணீர் தெளிக்க வேண்டும். அதன்மேல் 100 கிலோ தென்னை நார் கழிவை பரப்பி ஒரு கிலோ யூரியாவை சீராக தூவ வேண்டும். மீண்டும் அதன்மேல் நன்கு தண்ணீர் தெளிக்க வேண்டும். இதேபோல் நார்கழிவு, புளூரோட்டஸ் காளான் வித்து மற்றும் யூரியா ஆகியவற்றை 10 அடுக்குகள் வரும் வரை (ஒரு மீட்டர் உயரம் வரை) மாற்றி மாற்றி அடுக்கி ஈரம் காயாதவாறு தினமும் தண்ணீர் தெளித்துவர வேண்டும். 30 நாட்களுக்கு பிறகு இந்த கழிவானது கருப்பு நிறத்தில் மாறும். இதுவே கம்போஸ்ட் உரமாக பயிர்களுக்கு பயன்படுத்தக்கூடிய மிகச்சரியான தருணமாகும். இந்த உரத்தால் தென்னை நார்கழிவில் உள்ள

நார்ப்பொருட்கள் சிதைக்கப்பட்டு எளிதில் பயிருக்கு கிடைக்கும் சத்தாக மாறுகிறது. கரிமம், நைட்ரஜன் ஆகியவற்றின் விகிதாச்சாரம் 112:1 லிருந்து 21:1 என்ற அளவுக்கு குறைக்கப்படுகிறது. இதனால் நைட்ரஜன் சத்து வீணாவது குறைந்து பயிருக்கு பெருமளவில் கிடைக்கிறது. தழைச்சத்தின் அளவு 0.26 சதத்திலிருந்து 1.06 சதமாக அதிகரிக்கிறது. மக்கிய கம்போஸ்டில் நுண்சத்துக்கள், முதன்மை சத்துக்கள் மற்றும் இரண்டாம்நிலை சத்துக்கள் அளவு அதிகமாக இருக்கும். கம்போஸ்ட் உரமானது மானாவாரி நிலங்களுக்கும், களர்- உவர் நிலங்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மண்ணின் பவுதீக மற்றும் வேதியல் தன்மை களை பாதுகாக்கிறது. இந்த உரமானது நிலத்துக்கு சத்துக்கள் அளிப்பதுடன் மண்ணின் நீர்பிடிப்பு திறனை அதிகரிக்க செய்கிறது, ஒரு ஏக்கருக்கு சாதாரணமாக 5 டன் தொழு உரம் இடும் இடத்தில் கம்போஸ்ட் உரத்தை 2 டன் இட்டாலே தொழு உரத்திற்கு இணையான மகசூல், விளைபொருட்களின் தரம், மண்ணின் வளம் பாதுகாக்கப்படுவதுடன் சுற்றுச்சூழல் கேடு தவிர்க்கப்படுகிறது. இந்த உரத்தை தென்னை மற்றும் அனைத்து சாகுபடி பயிர்களுக்கும் பயன்படுத்தலாம்.

## பசுந்தேயிலை ரூ.3 விலை உயர்வு

**குன்னூர்,**நீலகிரி மாவட்டத்தில் இந்தாண்டு மழை குறைவால் தேயிலை விவசாயம் பெரும் பாதிப்படைந்துள்ளது. மகசூல் குறைவால் ஏல மையங்களுக்கு வரும் தேயிலை தூளின் வரத்தும் குறைந்துள்ளது. இருப்பினும் வர்த்தகர்கள் அதிகளவில் ஆர்வம் காட்டாததால் தேயிலை தூளின் விலையை குறைத்து விற்பனை செய்து வருகின்றனர். இதனால் உற்பத்தியாளர்களும் விவசாயிகளும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகின்றனர். இந்தவாரம் சாதாரண ரக பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.32 முதல் ரூ.33, நடுத்தரத்திற்கு ரூ.37 முதல் ரூ.38, உயர் ரகத்திற்கு ரூ.23 முதல் ரூ.24 வரை விலை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அனைத்து ரகத்திற்கும் ரூ.3 விலை உயர்ந்துள்ளது. குன்னூர் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால் தேயிலை செடிகளில் வறட்சி குறைந்ததுடன் சிவப்3 நிற சிலந்தி பூச்சியின் தாக்குதலும் முழுமையாக நீங்கியுள்ளது. இதன் காரணமாக வரும் நாட்களில் மகசூல் அதிகரிக்க கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் தேயிலை விலை எதிர்பார்த்தார்

போல் கிடைக்காததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**ரூ2.40 லட்சத்ரூற்கு தக்காளி விற்பனை**

**பாலக்கோடு, :** தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு தக்காளி மார்க்கெட்டில் நேற்று தக்காளி ஏலம் நடைபெற்றது. பெல்ரம்பட்டி, பெலமாரனஅள்ளி, பில்லுஅள்ளி, சீரியம்பட்டி, பாப்பிரெட்டிப்பட்டி உட்பட சுற்றுவட்டார பகுரூகளில் இருந்து 2000 கூடை தக்காளிகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதனை ஏலத்ரூல் எடுக்க ஈரோடு, பவானி, , ராமேஸ்வரம், முசிறி,கோவை ஆகிய இடங்களில் இருந்து வியாபாரிகள் வந்தனர். நேற்று மார்க்கெட்டில் ஒரு கூடை தக்காளி ரூ150 முதல் ரூ170க்கு விற்றது. 30 கிலோ எடை கொண்ட தக்காளி ரூ250க்கு விலை போனது. நேற்று மட்டும் 34 டன் தக்காளி ரூ2.40 லட்சத்ரூற்கு விற்பனையானது. அதே போல் 7 டன் காய்கறிகள் விற்பனைக்கு வந்தன. கத்தரிக்காய் கிலோ ரூ10க்கும், பாகற்காய் ரூ15 முதல் 18க்கும், வெண்டைக்காய் ரூ10க்கும், முள்ளங்கி ரூ10க்கும், பீர்க்கங்காய் ரூ10 முதல் 12க்கும் விற்றது. மொத்தம் 7 டன் காய்கறிகள் 70 ஆயிரத்ரூற்கு விற்பனையானது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வால்பாறையில் தென்மேற்கு பருவ மழை தொடங்கியது: அணைகளுக்கு நீர் வரத்து அதிகரிப்பு**

**வால்பாறையில் தென் மேற்கு பருவ மழை தொடங்கியதையடுத்து அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.**

## தென்மேற்குபருவமழை

வால்பாறை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை போதியளவு கிடைத்தது.இதனால் சோலையார் அணை முன்கூட்டியே தனது முழு கொள்ளளவான 160 அடியை விரைவாக எட்டியது. இதனால் மின் உற்பத்தி செய்யப்பட்டது.

ஒப்பந்தப்படி கேரள மாநிலத்திற்கும் தண்ணீர் திறந்து விடப்பட்டது. வன விலங்குகளின் தேவைக்காக ஆண்டுதோறும் திறந்து விடப்படும் தண்ணீரும் திறந்து விடப்பட்டது. குறிப்பாக சமவெளிப்பகுதி மக்களின் குடிநீர், விவசாய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

## கனமழை

பரம்பிக்குளம், ஆழியாறு ஆகிய அணைகளுக்கும் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.எப்போதும் பெரியபாதிப்பை ஏற்படுத்தும் காட்டுத்தீயும் மழை காரணமாக கட்டுப் படுத்தப்பட்டது. ஆனால் கடந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழை ஏமாற்றியது.

இந்த நிலையில் வால்பாறை பகுதியில் கடந்த மே மாதம் முதல் வாரத்தில் இருந்தே அவ்வப்போது மழை பெய்துகொண்டே இருக்கிறது.சில சமயங்களில் கன மழை யாகவும் பெய்ததால் சேதங்கள் ஏற்பட்டன. தொடர்ந்து வால்பாறை பகுதியில் நேற்று முதல் தென்மேற்கு பருவமழை தொடங்கி உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தொடர்ந்து வால்பாறை பகுதியில் நேற்று ஒரு சில இடங்களில் கன மழையும், லேசான மழையும் பெய்தது.

## தண்ணீர் வரத்து அதிகரிப்பு

கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக வால்பாறை யில் 15.5 மி.மீ. மழையும், சோலையார் அணையில் 6 மி.மீ. மழையும், சின்னக் கல்லாரில் 3 மி.மீ. மழையும், நீராரில் 4 மி.மீ. மழையும் பெய்துள்ளது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் சோலையார் அணைக்கு நீர் வரத்து அதிகரித்து நீர்மட்டம் 21.58 அடியாக

உயாந்துள்ளது. அணைக்கு வினாடிக்கு 76 கன அடித்தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

வால்பாறை பகுதி முழுவ தும் தொடாந்து மழை பெய்து வருகிறது.

## கிருஷ்ணாபுரம் காப்புக் காட்டில் தடுப்பணைகள் நிரம்பியது வனவிலங்குகளின் குடிநீர் பிரச்சினை தீர்ந்தது



**சிறுபாக்கம் அருகே கிருஷ்ணாபுரம் காப்புக் காட்டில் நேற்று முன்தினம் பெய்த கனமழையால் தடுப்பணைகள் நிரம்பி வழிந்தன. இதனால் வனவிலங்குகளின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டுள்ளது.**

### காப்புக்காடு

**சிறுபாக்கம் அருகே கிருஷ்ணாபுரம் பகுதியில் பல ஏக்கரில் காப்புக்காடு உள்ளது. இதில் வன விலங்குகள் வசிப்பவதற்கான பல்வேறு வகையான மரங்களும், செடிகளும், தீவன புற்களும் உள்ளன. இந்த காப்புக்காட்டில் புள்ளிமான், மயில், குரங்குகள், எறும்பு தின்னி, காட்டு பன்றிகள் உள்ளிட்ட வன விலங்குகள் வசித்து வருகின்றன. இருந்தபோதிலும் மற்ற விலங்குகளை விட புள்ளிமான்களே அதிகளவு வசித்து வருகின்றன. எனவே அவற்றை மான்களின் சரணாலயமாக தமிழக அரசு அறிவித்து, அதை வனத்துறையினர் கண்காணித்தும், பராமரித்தும்**

வருகின்றனர். இந்த காட்டில் வசிக்கும் விலங்குகளுக்கு கோடையிலும் தட்டுப்பாடின்றி குடிநீர் கிடைக்கும் வகையில், பல்வேறு தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. மழைகாலத்தில் தடுப்பணையில் தண்ணீர் சேமித்து வைக்கப்படுகின்றன. இதை குடித்து வனவிலங்குகள் உயிர் வாழ்ந்து வருகின்றன.

<u>குடிநீர் பற்றாக்குறை</u>

இந்த நிலையில் கடந்த 2 ஆண்டுகளாக போதிய அளவு பருவ மழை பெய்யவில்லை. இதனால் கிருஷ்ணாபுரம் காப்புகாட்டில் உள்ள தடுப்பணைகளில் தண்ணீர் இன்றி வறண்டு போனது. இதேபோல் பல்வேறு வகையான மரங்கள், செடிகள், தாவரங்கள் வளர்ச்சியில்லாமல் கருகி வந்தன. மேலும் வன விலங்குகளுக்கு குடிநீர் மற்றும் தீவன பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் வேறு வழியின்றி குடிநீர் மற்றும் தீவனத்திற்காக மான், மயில், காட்டுப்பன்றிகள் உள்ளிட்ட வனவிலங்குகள் காப்புக்காட்டை விட்டு வெளியேறி விவசாய பயிர்களை மேய்ந்து நாசமாக்கி வந்தன.

<u>விபத்தில் இறந்த விலங்குகள்</u>

அவ்வாறு செல்லும் போது மான்கள், மயில்கள் எதிர்பாராத விதமாக திறந்தவெளி கிணறுகளில் விழுந்தும், சாலையை கடக்கும் போது விபத்தில் அடிபட்டும் இறந்து வந்தன. மழை பெய்தால் மட்டுமே இதுபோன்ற சம்பவங்களை தடுக்க முடியும் என வனத்துறையினர் கூறினர். எனவே விவசாயம் செழித்து வளர மழையும், வனவிலங்குகளுக்காக காப்பு காட்டில் தடுப்பணையில் தண்ணீரை சேமித்து வைக்க மழை பெய்ய வருண பகவான் கருணை காட்ட மாட்டாரா? என விவசாயிகள் ஏக்கத்தில் இருந்தனர்.

<u>மழையால் நிரம்பிய தடுப்பணைகள்</u>

இந்த நிலையில் நேற்று முன்தினம் கடலூர் மாவட்டம் முழுவதிலும் பரவலாக மழை பெய்தது. இதேபோல் சிறுபாக்கம் மற்றும் கிருஷ்ணாபுரம் காப்பு காட்டில்

**கன மழை பெய்தது. இந்த மழையால் தடுப்பணைகள் மளமளவென நிரம்ப தொடங்கியது. காப்பு காட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்து தாழ்வான பகுதியான தடுப்பணைக்கு மழைநீர் உருண்டு ஓடி வந்தது. இதன் காரணமாக நேற்று காலையில் தடுப்பணைகள் நிரம்பி வழிந்தன. இதன் மூலமாக கிருஷ்ணாபுரம் காப்புக்காட்டில் வனவிலங்குகளின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டுள்ளது.**

## பரமத்திவேலூர் பகுதியில் சூறைக்காற்றுடன் மழை: ரூ.30 லட்சம் மதிப்புள்ள வெற்றிலை, வாழை சேதம்



பரமத்திவேலூர் பகுதியில் சூறைக்காற்றுக்கு ரூ.30 லட்சம் மதிப்புள்ள வெற்றிலை, வாழை சேதம் அடைந்துள்ளது. இதற்கு தங்களுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

### பலத்த சூறைக்காற்று

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகாவில் ஏராளமான ஏக்கரில் வெற்றிலை, வாழை உள்ளிட்ட பணப்பயிர்கள் பயிர் செய்யப்பட்டு உள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை பலத்த சூறைக்காற்று, மின்னலுடன் இந்த பகுதியில் மழை பெய்தது. இந்த பலத்த சூறாவளி காற்றால் பாலப்பட்டி பகுதியில் சுமார் 5 ஏக்கர் வெற்றிலை கொடிக் கால் சேதம் அடைந்தது.இதில் பாலப்பட்டியை சேர்ந்த சிவஞானம், மொட் டையன், விஸ்வநாதன், பூபதி, இளங்கோ, அன்னக்கிளி, முருகன் ஆகியோரது வெற் றிலை கொடிக்கால் காற்றில் அடியோடு முறிந்து சாய்ந்தது. இதில் முருகன் என்பவருக்கு மட்டும் ரூ.2 லட்சம் மதிப் பிலான

வெற்றிலை கொடிக் கால் சேதம் அடைந்து உள்ளது. மற்றவர்களது கொடிக்காலை யும் சேர்த்து மொத்தம் 5 ஏக்கர் அளவிற்கு வெற்றிலை பயிர் பாதிக்கப் பட்டு உள்ளது. இதன் மதிப்பு மட்டும் ரூ.20 லட்சம் என வெற்றிலை விவசாயிகள் தெரிவித்தனர்.

நிவாரணம் வழங்க வேண்டும்

மேலும் வாழை பயிர் செய்யப்பட்டு உள்ளதில் ஏக்கர் ஒன்றுக்கு 50-க்கும் மேற்பட்ட வாழைத்தார்கள் சேதம் அடைந்து உள்ளது. மொத்தம் 50-க்கும் மேற்பட்ட ஏக்கரில் பரவலாக வாழை பயிர் சேதம் அடைந்ததில் அதன் மதிப்பு ரூ.10 லட்சம் வரை இருக்கும் என வாழை பயிர் செய்துள்ள விவசாயிகள் தெரிவித்தனர்.

சூறைக்காற்றால் சேதம் அடைந்த வெற்றிலை கொடிக் கால் மற்றும் வாழை களால் விவசாயிகளுக்கு பெரிய இழப்பு ஏற்பட்டு உள்ளது. எனவே தங்களுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. மேலும் பலத்த காற்றால் பரமத்திவேலூரில் இருந்து மோகனூர் செல்லும் சாலை யில் ஓலப்பாளையம், எல்லை மேடு, பாலப்பட்டி ஆகிய இடங்களில் சாலையின் நடுவே புளியமரங்கள் வேரோடு சாய்ந்ததில் போக் குவரத்து பாதிக்கப்பட்டது. மின்கம்பங்களும் பலத்த காற்றால் கீழே விழுந்து சேதம் அடைந்தது.

## ஊட்டியில்,தென்னிந்திய விவசாயிகள் சங்க மாநாடு



கூட்டத்தில் கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்க தலைவர் பழனிச்சாமி பேசிய போது எடுத்த படம்.

தென்னிந்திய நதிகளை இணைக்க வலியுறுத்தி ஊட்டியில் அடுத்த மாதம் 5-ந்தேதி தென்னிந்திய விவசாயிகள்சங்க மாநாடு நடைபெற உள்ளது.

கூட்டம்

ஊட்டியில் கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம் மற்றும் நீலகிரி மாவட்ட விவசாயிகள், தொழிலாளர்கள் நல சங்கத்தின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட் டத்திற்கு செல்வராஜ் தலைமை தாங்கினார். கூட் டத்திற்கு பின்பு கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் பழனிச்சாமி நிருபர்களிடம் கூறியதா வது:-

இந்தியாவில் தமிழகத்தில் தான் கிராம பகுதிகளில் இருந்து நகர பகுதிகளுக்கு அதிகமான மக்கள் இடம் பெயர்ந்து செல்கின்றனர். இதற்கு முக்கிய காரணம் விவ சாய பணிகள் மேற்கொள்ள இளைஞர்கள் முன்வருவது இல்லை.

மெட்ரோ ரெயில்

மேலும் வறட்சி, தண்ணீர் பற்றாக்குறை, ஆட்கள் பற்றாக் குறை, விவசாய பொருட் களுக்கு போதிய விலை இல்லை, இடுபொருட்களின் விலை உயர்வு போன்றவற்றின் காரணமாக பொதுமக்கள் விவசாயத்தை விட்டு, விட்டு நகரங்களுக்கு செல்கின்றனர்.

சென்னை மெட்ரோ ரெயில் கட்டுமானப்பணியில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதில் 90 சதவீதம் பேர் வட மாநி

லங்களை சேர்ந்தவர்கள். தமி ழக இளைஞர்கள் குடி பழக்கத் தால் உடல் வலிமையை இழந்து விட்டனர். இதனால் இது போன்ற கட்டுமான பணி களில் அவர்களால் ஈடுபட முடியவில்லை.

இந்தியா முழுவதும் மது விலக்கு

தென்னிந்தியாவில் தமி ழகத்தை தவிர ஆந்திரா, கேரளா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் கள் இறக்க அனுமதிக்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் அதிக போதை தருவ தற்காக கள்ளில் 'புளோரல் ஹைட்ரேட்' என்ற வேதியல் பொருள் கலக்கப் படுகிறது.

இதனால் 'கள்' அருந்துபவர் களுக்கு பல்வேறு பிரச்சினை கள் ஏற்படுகிறது.

எனவே கள் இறக்க அனுமதி அளிக்க முடியாது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். எனவே இயற்கையாக விளையும் கள்ளை இறக்க முடியாத நிலையில், குஜராத் தில் பூரண மது விலக்கு இருப் பது போல் இந்தியா முழுவதும் பூரண மதுவிலக்கை மத்திய அரசு கொண்டு வர வேண் டும்.

தென்னக நதிகள் இணைப்பு

இந்தியாவிலேயே குறைந்த மழை அளவு கொண்ட மாநில மாக தமிழகம் உள்ளது. இங்கு ஆண்டிற்கு 950 மி.மீ. அள விற்கு தான் மழை பெய்கிறது. இது தேசிய சராசரி ஆயிரத்து 300 மி.மீ. விட குறைவு. மேற்கு தொடர்ச்சி மழையில் உற்பத்தி யாகும் ஆறுகளில் இருந்து ஆண்டுதோறும் 3 ஆயிரம் டி.எம்.சி அளவிற்கு கடலில் தண்ணீர் கலந்து வீணா கிறது.

ஆனால் தமிழகத்தில் ஆண்டு தோறும் 200 டி.எம்.சி. தண்ணீர் அளவிற்கு அன்டை மாநிலங்களிடம் கேட்க வேண்டிய நிலை உள் ளது. இதனை தவிர்க்க மகா நதி, கோதாவரி, காவேரி உள் ளிட்ட தென்னிந்திய நதிகளை இணைக்க வேண்டும். தற் போது மத்தியில் பதவி ஏற்று உள்ள பாரதீய ஜனதா அரசு இதற்கான நடவடிக்கைகள தொடங்க வேண்டும்.

மாநாடு

அடுத்த மாதம் ஜுலை 5-ந்தேதி ஊட்டியில் தென்னிந் திய விவ சாயிகள் சங்க மாநாடு நடக் கிறது. இதில் தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா, புதுச்சேரி

உள்ளிட்ட மாநிலங் களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொள்வார்கள். இந்த மாநாட்டை முன்னிட்டு பேரணியும் நடத்தப்பட உள் ளது.

இந்த மாநாட்டில் தென்னக நதிகளை இணைப்பது, விவ சாயிகளின் நலன்களை பாது காப்பது. மரபணு மாற்றப்பட்ட விதைகளை இறக்குமதி செய்ய எதிர்ப்பு தெரிவிப்பது, நீலகிரி யில் வன உரிமை சட்டத்தை அமல்படுத்த வலியுறுத்துவது, இங்குள்ள விவசாயிகளுக்கு பட்டா வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட உள்ளன

இவ்வாறு அவர் கூறினார்.

## கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முதல்போக சாகுபடிக்கு நெல் விதைப்பு பணி



கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முதல்போக நெல் சாகுபடிக்காக நாற்றங்கால்களில் நெல் விதைப்பு பணி நடந்து வருகிறது. விவசாயிகள் ஆர்வமுடன் முதல்போக சாகுபடி பணியில் ஈடு பட்டு உள்ளனர்.

கம்பம் பள்ளத்தாக்கு

தேனி மாவட்டம் லோயர் கேம்பில் தொடங்கி பழனி செட்டிப்பட்டி வரை கம்பம் பள்ளத்தாக்கு பகுதியாகும். முல்லைப்பெரியாறு அணையின் பாசனம் மூலம் இங்கு 14 ஆயிரத்து 707 ஏக்கர் நிலங்கள் இருபோக பாசன வசதி பெருகின்றன. கடந்த

சில ஆண்டுகளாக போதிய மழை இல்லாத காரணத்தால் இரண்டு போகம் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட முடிய வில்லை. ஒரு போகம் மட்டுமே மகசூல் பெற்ற நிலையில், 2-ம் போக நெல் சாகுபடியில் நெற்கதிர் பால் பிடிக்கும் வேளையில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு பயிர்கள் கருகி போனது. இந்த ஆண்டு கோடை மழையின் பயனாக முல்லைப் பெரியாறு அணையில் இருந்து கடந்த 1-ந்தேதி பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. 6 ஆண்டுகளுக்கு பிறகு ஜூன் 1-ந்தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டதால் விவசாயிகள் ஆர்வத்துடன் முதல் போக நெல் சாகுபடி பணியில் ஈடு பட்டு உள்ளனர்.

விவசாய பணிகள் தொடக்கம்

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்துப் போனதால் விவ சாய பணிகள் பாதிக்கப்பட் டதால் விவசாயிகள் கோடை கால பயிர் சாகுபடியில் ஆர் வம் காட்டவில்லை இதனால் வயல்கள் தரிசுநில மாகவே காட்சி அளித்தன. அணையில் தண்ணீர் திறக்கப் பட்டதால் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள கூடலூர், கம்பம், சுருளிப்பட்டி, கருநாக்க முத் தன்பட்டி, காயகவுண்டன் பட்டி, ராயப்பன்பட்டி, உத்தம பாளையம், சின்னமனூர், மார்க்கையன் கோட்டை ஆகிய ஊர்களில் விவசாயிகள் முதல்போக விவசாயத்திற்கு விவசாயப் பணிகளை தொடங்கியுள்ளனர். முதல் கட்டமாக நாற்றங்கால் அமைத்து நெல் விதைகளை விதைக்கும் பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

முதல்போகத்தில் குறுகிய கால பயிர்களை பயிரிட விவ சாயிகள் ஆர்வம் காட்டி வரு கின்றனர். இதனால் 509 ரகத்தை சேர்ந்த நெல்விதை களை வாங்கி விவசாயிகள் நாற்று விதைப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

மாம்பழத்துக்கு தடை: இந்தியா வருகிறது ஐரோப்பிய யூனியன் நிபுணர் குழு

இந்திய மாம்பழ இறக்குமதிக்கு ஐரோப்பிய யூனியன் தடை விதித்துள்ள நிலையில் இதுகுறித்து ஆராய நிபுணர் குழுவினர் வரும் செப்டம்பரில் இந்தியாவுக்கு வருகின்றனர்.

இந்திய மாம்பழங்களில் பூச்சிகள் இருப்பதாகக் கூறி அதன் இறக்குமதிக்கு ஐரோப்பிய யூனியன் கடந்த மே 1-ம் தேதிமுதல் தடை விதித்தது. இந்த தடை உத்தரவு 2015 டிசம்பர் வரை தொடர்ந்து அமலில் இருக்கும். இதனால் இந்திய மாம்பழ ஏற்றுமதி சந்தையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் பிரிட்டனின் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த எம்.பி. கெய்த் வாஸ் ஐரோப்பிய யூனியன் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தடையை நீக்க முயற்சி மேற்கொண்டு வருகிறார். அண்மையில் பிரசெல்ஸ் சென்றிருந்த அவர், ஐரோப்பிய யூனியனின் வேளாண் துறை ஆணையர் டாசியன் சியலோஸை சந்தித்துப் பேசினார்.

இதுகுறித்து கெய்த் வாஸ் லண்டனில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

2013-ம் ஆண்டில் ஐரோப்பிய யூனியன் நாடுகளில் இறக்குமதி செய்யப்பட்ட இந்திய மாம்பழங்களின் தரம் தொடர்பாக 37 புகார்களும் பாகிஸ்தான் மாம்பழங்கள் குறித்து 136 புகார்களும் டொமினிகன் குடியரசு மாம்பழங்கள் குறித்து 46 புகார்களும் எழுந்துள்ளன.

இதில் இந்திய மாம்பழங்களின் இறக்குமதிக்கு மட்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது விசித்திரமாக உள்ளது. இந்தியாவில் புதிய அரசு பதவியேற்றுள்ள நிலையில் ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் இந்திய அரசுடன் நேருக்குநேர் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

இதுதொடர்பாக ஐரோப்பிய யூனியனின் நிபுணர் குழுவினர் வரும் செப்டம்பரில் இந்தியா செல்கின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவின் காபி ஏற்றுமதி 9% உயர்வு

இந்தியாவின் காபி ஏற்றுமதி இந்த ஆண்டு ஜனவரி முதல் மே வரையிலான காலத்தில் 9.32 சதவீதம் உயர்ந்துள்ளது. ரூபாய் மதிப்பில் இது ரூ. 2,567 கோடியாகும். சர்வதேச சந்தையில் காபிக்கு அதிக விலை கிடைத்ததால் ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளது என்று காபி வாரியம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் காபி ஏற்றுமதியில் ஐந்தாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்தில் இந்தியாவின் காபி ஏற்றுமதி வருமானம் ரூ. 2,347 கோடியாக இருந்தது. ஏற்றுமதி அளவு 1,59,275 டன்னாகும். முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது குறைந்துள்ளது. முந்தைய ஆண்டு இதே காலத்தில் 1,59,295 டன் காபி கொட்டை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் காபி கொட்டைக்கு அதிக விலை கிடைத்தது. இதனால் சராசரியாக ஒரு டன் ரூ. 1,61,160 என்ற விலைக்கு விற்பனையானது. முந்தைய ஆண்டு இதே காலத்தில் ஒரு டன் ரூ. 1,47,394 என்ற விலைக்கு விற்பனையானது.

சர்வதேச சந்தையில் காபி விலை 80 சதவீத அளவுக்கு உயர்ந்து காணப்பட்டது. உலகிலேயே அதிக அளவில் காபி உற்பத்தி செய்யும் பிரேஸிலில் காபி விளைச்சல் குறைந்ததே விலை உயர்வுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

காபி ரகங்களில் அராபிகா 43,465 டன் ஏற்றுமதியானது. கடந்த ஆண்டைவிட இது 31 சதவீதம் கூடுதலாகும். ரொபாஸ்டா ரகம் 73,645 டன் ஏற்றுமதியானது. ரொபஸ்டா ரகம் மட்டும் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 15 சதவீதம் குறைவாகும்.

இன்ஸ்டன்ட் காபி ரகம் 91 சதவீதம் உயர்ந்து 18,875 டன் ஏற்றுமதியாகியுள்ளது. முந்தைய ஆண்டு இதே காலத்தில் 9,850 டன் காபி மட்டுமே ஏற்றுமதியானது.

உள்நாட்டு நுகர்வு 3,11,500 டன்னாகும். 2013-14-ம் அறுவை பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்) இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.1 சதவீதம் குறைவாகும். 2012-13-ம் ஆண்டில் நுகர்வு 3,18,200 டன்னாக இருந்தது.